# கலைமலர்

Co-Vice Principal

யாழ்-இந்துக்கல்லூரி
உயர்தர மாணவர் ஒன்றியம்
முதலாம் வருடம்

**1976 - 1977**



## கலைவிழாக் கோலம்

| | |
|---|---|
| மாலை 5-00 — 5-05 | மங்கள விளக்கேற்றல் |
| | தேவாரம் |
| மாலை 5-05 — 5-45 | மங்கள இசை |
| மாலை 5-45 — 6-15 | வரவேற்புரை |
| | தலைமையுரை |
| | ஆசியுரை |
| | மலர் வெளியீடு |
| இரவு 6-15 — 7-00 | கவியரங்கு |
| இரவு 7-00 — 7-30 | நாட்டிய அரங்கு |
| இரவு 7-30 — 8-15 | வழக்காடு மன்றம் |
| இரவு 8-15 — 8-20 | நன்றியுரை |
| இரவு 8-20 — 9-00 | நாடக அரங்கு |
| இரவு 9-00 | கல்லூரிக் கீதம் |
| | தேசிய கீதம் |

உ

# கலைமலர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உயர்தர மாணவர் ஒன்றியம்

முதலாம் வருடம்

## - கலைவிழாச் சிறப்பிதழ் -

இதழாசிரியர்

எழுவை மகேசன்

இதழ் 2 ‘மார்ச் 1977’

# COLOMBO MOTOR STORES

*Dealers in all kinds of Moter Spare Parts, Accessories and Paints,*

ஸ்ரீ லங்கா அரச வர்த்தக (பொது) கூட்டுத்
தாபன மோட்டார் வாகன உதிரிப்பாக
விற்பனையாளர்கள்.

## கொழும்பு மோட்டோர் ஸ்ரோர்ஸ்

மோட்டார் வாகன உதிரிப்பாகங்களும், தீந்தை வகை விற்பனையாளர்களும்

இல. 37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

No. 37, Stanley Road,
JAFFNA.


அதிபர்

புரவலர்




உயர்திரு. பொ. ச. குமாரசுவாமி அவர்கள்

## உப அதிபர்
### முன்னுள் உபபுரவலர்



திரு. ச. பொன்னம்பலம்

உப புரவலர்



திரு. பொ. மகேஸ்வரன்

உப புரவலர்



திரு. சு. சண்முகராசா

## எமது அதிபர்
## வாழ்த்துகிறார் !

யாழ்நகர் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் முதல் வருட ஒன்றியம் எடுக்கும் கலைவிழாவினையும் அவ்விழா மலரினையும் வாழ்த்துவதில் யான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஆண்டிலே முதன் முதலாக இக்கலைவிழா ஆரம்பமாகியது. எல்லோரும் பாராட்டும் வகையில் விழா இனிது நடைபெற்றது. இவ்வாண்டிலும் இம்மாணவர் ஒன்றியம் சுதேசிய கலைகளை வளர்க்கவும், தம்மறிவினை விருத்தி செய்யவும் முனைந்து நிற்கின்றது. மலர் வெளியீடு இவ்வாண்டிலும் நிகழவிருக்கிறது. கருத்துத்திறனை மாணவர் வெளிப்படுத்த இம்மலர் பெரிதும் உதவும், என்ற நம்பிக்கை எனக்குண்டு. வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவினைப் பயன் படுத்தவும் நுண்கலைகளை வளர்க்கவும் மாணவரொன்றியம் பெரிதும் பாடுபடும் வேளையில் நமது பாரம்பரியப் பண்பாட்டினைப் பேணி வளர்க்கவும் முன்னிற்பதை நினைந்து என்னுள்ளம் மகிழ்ச்சியடைகின்றது, உயர்தர மாணவரொன்றியத்தின் ஆக்க வேலைகள் சிறந்து விளங்குக, என மனமார வாழ்த்துகின்றேன். விழாமலர் இனிது மலர்ந்து மணம் வீசட்டும் என என்னுள்ளங்கலந்த ஆசியினைக் கூறுகின்றேன்.

வாழிய செந்தமிழ், வாழ்க நம்கலைகள், வளர்க இந்துக் கல்லூரி.


பொ. ச. குமாரசாமி

தொலைபேசி: 362

# கே. கே. வி.

# யாழ்ப்பாணம் நகை மாளிகை

**தங்க, வைர நகை வியாபாரம்**



82/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தங்கப் பவுண் வைர நகைகள்

**எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

V. P. P. உடன் கவனிக்கப்படும்.



ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

# K. K. V. Jaffna Jewel House

82/4 Kasturiar Road, JAFFNA.

## முத்தமிழ்க் காவலர்

# வாழ்த்துகிறார்!

இலங்கை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தினரால் கலைவிழா ஒன்று அண்மையில் நடாத்தப்படவிருக்கிறது என்ற செய்தியும், அதன் நினைவாக மலர் ஒன்று வெளிவரவிருக்கிறது என்ற செய்தியும் என்னை மகிழ்விக்கின்றது.

கலைவிழா இனிது நடைபெற வேண்டும் எனவும், மலர் சிறந்த கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து தமிழ்மணம் வீச வேண்டும் எனவும், விழாக் கொண்டாடும் மாணவர்கள் அனைவரும் கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும் நடந்து, நன்கு கற்று, முதல் வகுப்பில் வெற்றிபெற்று, நாட்டுக்கும் மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு புரிந்து நல்வாழ்வு வாழவேண்டும் எனவும் முழுமனதுடன் வாழ்த்துகின்றேன்.

திருச்சிராப்பள்ளி - 8.
29-12-76.

தங்களன்புக்குரிய
கி. ஆ. பெ. விசுவநாதம்

*Best Wishes From*

★

# Eswar Coporation

★

18, STANLEY ROAD, JAFFNA.

T' phone: 7308

தந்தி: வைரம் தொலைபேசி 7199

## தங்கப் பவுண்,

வைர நகைகள்

எங்களிடம்

மலிவாகப்

பெற்றுக்கொள்ளலாம்.

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஆசிரியத் தலையங்கம்

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு."

இது வள்ளுவன் வாக்கு. எமது ஒன்றிய மாணவர்கள் இக் கலைவிழாவை ஒரு பெருவிழாவாக எடுக்கத் தீர்மானித்தபோதே, அவ்விழாவையொட்டி ஒரு "கலைமலரை"யும் வெளியிடுவதென்று எண்ணித் துணிந்துவிட்டோம். இந்த எண்ணத்தைச் செயலாக்குவதற்கு முயற்சித்து, அதில் வெற்றியும் பெற்ற இவ்வொன்றிய மாணவர்களின் உழைப்பின் பெருமையை இம்மலர் பிரதிபலிக்கிறது என்பதில் ஐயமில்லை.

ஈழவள நாட்டில் யாழ்ப்பாணம் என்பது ஒரு கற்பகச்சோலை. அதில் இந்துக் கல்லூரி புகழெனும் கிளைபரப்பி, ஓங்கி வளர்ந்திருக்கும் அறிவுப் பெரு விருட்சம். அவ்விருட்சத்திலே 1976-ம் ஆண்டு மலர்ந்த அழகிய மலர் எமது ஒன்றியம். அம்மலரின் ஒரு இதழ்தான் இப்பொழுது உங்கள் கரங்களில் தவழ்ந்து இனிய சுகந்த மணத்தைப் பரப்புகின்றது. மரத்தின் பெருமையையும், மலரின் மணத்தையும் மாநிலம் அறிந்ததே. இதழின் சிறப்பை இதழே சொல்லட்டும்!

ஆக்கங்கள் படைத்து இதழுக்குப் பெருமையூட்டிய நண்பர்களுக்கும், ஊக்கங்கள் அளித்து இளைஞர் சிறுமை போக்கிய பெரியோர்களுக்கும், ஆசி வழங்கிய அறிவுச் செம்மல்களுக்கும், கூசி நின்ற வேளையிலே குதூகலத்தோடு வர்த்தக விளம்பரங்களை நல்கிய வணிகப் பெருமக்களுக்கும், அவ்விளம்பரங்களை எடுத்துத்தந்த பேரன்பர்களுக்கும், செந்தமிழ் மணக்கும் இம் மலரைச் செம்மையாய் எமக்களித்த செட்டியார் அச்சகத்தினருக்கும், மேலட்டை வண்ணப்படத்தை வரைந்துதவிய ஓவியர், ஆசிரியர் குணசிங்கம் அவர்களுக்கும் மற்றும் இலைமறை காயாக இம்மலர்ப் படைப்புக்கு உதவிய மறக்கமுடியாத மாண்புடையோர்க்கும், யாழ். இந்துக் கல்லூரி உயர்தர முதலாம் வருட மாணவர் ஒன்றியத்தின் சார்பில் இதழாசிரியனின் இனிய நன்றிகள்.

கசடறக் கல்வி தந்து, காரியத்தில் சித்தி தந்து, பேனையிலே தமிழைத் தந்து, காசினியில் கருணை மழை பொழிகின்ற, கலைமகளின் காலடிகளுக்கு இம் மலரைக் காணிக்கையாக்குகின்றோம்.

வணக்கம்

# உயர்தர மாணவர் ஒன்றியம்

[ முதலாம் வருடம் ]

| | | |
|---|---|---|
| புரவலர் | : | திரு. பொ. ச. குமாரசுவாமி (அதிபர்) |
| உப புரவலர்கள் | : | திரு. ச. பொன்னம்பலம் |
| | | திரு. பொ. மகேஸ்வரன் |
| | | திரு. சு. சண்முகராஜா |
| தலைவர் | : | செல்வன் பா. பாலரவி |
| துணைத் தலைவர் | : | செல்வன் செ. வெற்றிக்குமாரன் |
| செயலாளர் | : | செல்வன் வை. யோகேஸ்வரன் |
| துணைச்செயலாளர் | : | செல்வன் சி. இராஜேந்திரன் |
| பொருளாளர் | : | செல்வன் அ. லிங்கநாயகம் |
| பத்திராதிபர் | : | செல்வன் சி. மகேசன் |

வகுப்புப் பிரதிநிதிகள்:

11A செல்வன் தா. மனோகரன்
11B செல்வன் சு. கதிர்காமநாதன்
11C செல்வன் கி. மனோகரன்
11D செல்வன் ச. விமலராஜ்
11E செல்வன் வை. கருணைநாதன்

*** இருபத்தொரு (21) பொதுக் கூட்டங்களும், ஒரு சிறப்புக் கூட்டமும் நடைபெற்றன.

*** ஏழு (7) செயற்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

*** கலை விழாவை முன்னிட்டு நிதியுதவிக் காட்சி ஒன்றை 14-11-76 ல் சாந்தி படமாளிகையில் வெற்றிகரமாக நடாத்தி முடித்தோம்.

*** சிறப்புச் சொற்பொழிவாளராக செல்வன் இ. ஜெயராஜ் (தலைவன் உ. மா. ஒ. 2ம் வருடம்) கலந்து கொண்டு "சமுதாயத்தில் சமயத்தின் பங்கு" என்னும் தலைப்பில் உரையாற்றினர்.

*** "இன்றைய இளைஞர்களின் போக்கு சமுதாயத்தை இட்டுச் செல்வது ஆக்கப்பாதைக்கா? அல்லது அழிவுப்பாதைக்கா?" "இலங்கையில் படித்த வாலிபர்கள் அந்நியநாட்டுக்குச் செல்வது வரவேற்கத்தக்கதா? அல்லது வரவேற்க முடியாததா?" "பெண்கள் வேலைக்குச் செல்வது அவசியமா? அல்லது அவசியமற்றதா?" ஆகிய தலைப்புக்களில் மூன்று விவாதங்கள் ஒன்றிய அங்கத்தினரிடையே நடாத்தப்பட்டன.


*** "கம்பராமாயணத்தில் கதாநாயகனாக இருக்க இராமன் தகுதியுடையவனா? அன்றி தகுதியற்றவனா?" என்பதை ஆராய வழக்காடு மன்றம் ஒன்று தொடர்ந்து இரு தினங்களாக நடாத்தப்பட்டது.

*** 'இணையற்ற தமிழ் எழுத்தாளர்கள்', 'இலங்கையில் இருந்து புத்திசாலிகள் வெளியேற்றம்' ஆகிய தலைப்புக்களின் கீழ் நடைபெற்ற கருத்தரங்குகளில் எமது ஒன்றிய மாணவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

*** 1-12-76 இல் பரியோவன் கல்லூரி மாணவர்கள் நடாத்திய சமூக விருந்துபசார வைபவத்தில் வை. யோகேஸ்வரன், சோ. வேணுகோபன் ஆகியோர் எமது ஒன்றியத்திலிருந்து கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி — உயர்தர மாணவர் ஒன்றியம் — முதலாம் வருடம் 1976 - 1977

செயற்குழு



இருப்பவர்கள் (இ - வ) :

அதிபர், வை. யோகேஸ்வரன் (செயலாளர்), திரு. சு. சண்முகராசா (உப புரவலர்), பா. பாலரவி (தலைவர்), திரு பொ. மகேஸ்வரன் (உப புரவலர்), அ. லிங்கநாயகம் (பொருளாளர்), திரு. ச. பொன்னம்பலம் (உப அதிபர்).

நிற்பவர்கள் (இ - வ) :

சி. இராஜேந்திரன் (உப செயலாளர்), சு. கதிர்காமநாதன், சி. மகேசன் (பத்திராதிபர்), கி. மனோகரன், தா. மனோரதன், செ. வெற்றிக்குமாரன் (உப தலைவர்), செ. விமலராஜ், வை. கருணைநாதன்.

★ தரமான ஜவுளித் தினுசுகளுக்கும்

★ றெடிமேட் உடைகளுக்கும்

மற்றும்


★ அழகுசாதனப் பொருட்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

# ராஜ்கோபால்ஸ்

47, பெரியகடை, — யாழ்ப்பாணம்.

போன்: 286



அழகிய

தங்கப் பவுண் நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

∵ சிறந்த ஸ்தாபனம் ∵

# கே. டி. எம். ஜுவல்லர்ஸ்

நகை வைர வியாபாரம்

67, கன்னுதிட்டி, — யாழ்ப்பாணம்.

*With the Best Compliments*

*of*

CHELLAPPA & CO.

4/1, STANLEY ROAD, — JAFFNA.

*T' phone :*
*664*

*T' gram :*
*KAMALAM*

**A. NALLATHAMBY**

*Jewellers & Gem Merchant*

75, KANNATHIDDY — JAFFNA.

தொலைபேசி:
664

தந்தி:
கமலம்

ஆ. நல்லதம்பி நகை வைர வியாபாரம்

75, கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்.

## தலைவர் தகவுரை

"வெஞ்சிலையே கோடுவன, மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன" எனும் அடிகள் தந்த புகழேந்தி இன்றிருந்தால் கோடிய நீதியைக், குன்றிய குணங்களைக், குமுறும் நெஞ்சங்களைக் கண்டு, வெந்து மடிந்திருப்பார். "நாடென்ப நாடா வளத்தன்" என்று பாடிய வள்ளுவப் பெருந்தகை இன்றிருந்தால்... பொருளாதார, சமூக அரசியற் செயற் கோடுகளுக்குள் செயற்பட்டு, உழன்று தளர்ந்து நிற்கும் நம் தமிழ் மக்களுக்குத் தமிழ்த்தாய் தரும் தாலாட்டுத்தான் இக் கலைவிழா! ஒரு நல்விழா!

பழைமையை மறந்து புதுமையுடன் இன்பமனுபவித்திடும் இக்கால இளைஞர்களுக்குப் பழைமை ஒரு கயமை எனினும் பழைமையின் பண்பையும் பயனையும் சிந்திக்க வைப்பதுதான் இக் கலைமலர்!

இவ்வாண்டு ஒன்றியத்தின் இளந்தலைமுறையினால் நடாத்தப்பட்ட, கவி, கருத்து, வழக்காடு அரங்குகள் ஆர்வமிகுதியுற்றுக் காணப்பட்டவை எம்மிடையே எழுந்துள்ள மொழியார்வத்துக்கோர் எடுத்துக்காட்டு! எம்மவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கற்றவர் வழங்கிய கோட்பாடுகளுக்கு உட்பட்டு எம்பணியைத் தொடரவேண்டும் என்பது எமது பேரவா.

கல்வி கல்வியாகப் பரிணமிப்பது பாடசாலைகளில்தானாகும். கல்வி பயிலும் காலத்தே இக் கலைவிழாவைக் கலைமகளுக்கு விழாவாக எடுப்பதில் நாம் மிகவும் பெருமைப்படுகின்றோம்.

நெஞ்சிலுரமும், நேர்மைத் திறனும் கொண்ட எமது மாணவ மணிகளின் பணி, சமூகப் பணியாக ஒரு தெய்வீகப் பணியாக மலர வேண்டும். எம் ஒன்றிய அங்கத்தினர் காலத்துக்குக் கணக்குக் கொடுத்துச் செயலுநரின் நிலைநின்று செயலெனும் மூலவளத்தை ஆக்கப்பணியெனும் திருப்பணிக்கு அர்ப்பணிப்பார்களாக!

பா. பாலரவி
*ஒன்றியத் தலைவர்*

## பொருளாளரின் அறிக்கை

யாழ். இந்துக் கல்லூரி உயர்தர (முதலாம் வருடம்) மாணவர் ஒன்றியம் வெற்றிகரமாகக் கலைவிழா ஒன்றையும், அதனை முன்னிட்டு கலைவிழா மலர் ஒன்றையும் வெளியிட இருக்கும் இவ்வேளையில் இவ்வறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மிகவும் பெருமையடைகின்றேன். கடந்த வருடம் எமது ஒன்றியம் சிறப்பான நிகழ்ச்சியாகக் கார்த்திகை மாதம் 14ம் திகதி யாழ். சாந்தி படமாளிகையில் ஒரு நிதியுதவிப் படக்காட்சியை நடாத்தி முடித்தது. இந்நிதியுதவிக் காட்சியின் பிரதான நோக்கம் கலைவிழாவை நடாத்துவதற்கு தேவையான நிதியைச்சேகரிப்பதாகும்.

எமது ஒன்றிய மாணவர்களின் விடாமுயற்சியும், அயராத உழைப்பும் முழு ரிக்கெற்றுக்களையும் இரு வாரங்களுக்கிடையில் விற்பதற்குக் காரணமாயிருந்தது. மேற்படி நிதியுதவிக் காட்சியில் நாம் திரட்டிய நிதி 2650 ரூபா. மேற்படி காட்சிக்கு நாம் செலவிட்ட தொகை 690 ரூபா. மேற்படி நிதியுதவிக் காட்சியை ஏற்பாடு செய்வதற்கு எமக்கு உறுதுணை புரிந்த அதிபர், கல்வி அதிபதி, மாநகர சபை ஆணையாளர், இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம், சாந்தி பிலிம்ஸ் லிமிட்டெட் ஆகியோருக்கும்; எமது நிதிஉதவிக்காட்சி ரிக்கெற்றுக்களை விற்று எமக்கு நிதியுதவி செய்த பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஒன்றியத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ. லிங்கநாயகம்

# தேசிய ஒருமைப்பாடும் பூரண சுதந்திரமும் தமிழ் வாலிப முன்னணிகளும்

R. மகேந்திரன்
11 E

ஒரு நாட்டின் பண்பும், கலாச்சாரப் பெருமையும் ஒரு சந்ததியுடன் நின்று விடுவதில்லை. தொடர்ந்து கொண்டே செல்கிறது. நம்மூதாதையர்களின் பெருமைகளைக் கட்டிக்காத்து புதிய உலகத்தின் போக்கைப் புரிந்து, அதற்கேற்பப் பழைமையின் வேரில் வாழ்வதுதான் சிறந்த இளைஞர்களின் பண்பாக அமைய வேண்டும். சிறிய விதையிலேயே கால் கொண்டு கிளைபரப்பிச் செழித்து வளர்ந்த ஆலமரம் பலவாண்டு காலமாக நிலைத்துத் தளிர் பரப்பித் தனது பொலிவை இழக்காது அழகோடு நிற்பதற்கு அடிப்படையாக அமைவது அதன் விழுதுகளே! அதனை ஒப்ப நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்களான இளைஞர்கள் ஆலம் விழுதுகள்போல் தமது சமுதாயத்துக்கு உறுதியைக் கொடுக்க வேண்டும்.

இன்றைய பெரியவர்கள் நாளை முதிர்ந்துவிட, நேற்றைய இளைஞர்கள் நாளைய பெரியவர்களாகின்றனர். இது நியதி. இந்நியதியை மாற்ற முடியாது. எனவே இளைஞர்கள் எதிலும் உற்சாகமும், உறுதியும், பண்புங் கொண்டவர்களாகத் தம்மை உயர்த்தி வெற்றியடைய வேண்டும். வெறும் உணர்ச்சியை விட்டு காரிய சாதனையை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். உலக சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்போமானால் எங்கும் சுதந்திரம் ஓங்கி உறுதி பெறுவதற்கு இளைஞர்கள் நல்கிய உழைப்பும் தியாகமும் சீர்படச் செயற்பட்டிருக்கின்றன. இளைஞர்கள் இயற்கையாகவே உற்சாகம் உடையவர்கள். இளம் உள்ளத்தில் இருந்து பிறக்கின்ற வீர உணர்ச்சி நற்பயனைத் தரும். எனவே ஒவ்வொரு இனமும் தன் பூரண விடுதலைக்காக வீர இளைஞர்களையே வேண்டி நிற்கின்றது.

இளம் உள்ளத்து வேகத்தைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும். எம்மைச் சிலர் மிகவும் இலகுவாக மயக்கித் திருப்பி விடுவார்கள். அவர்களுடைய மயக்க மொழிகளுக்கோ, போலிவார்த்தைகளுக்கோ பலியாகாது சுயசிந்தனை மூலம் நமது நாட்டின், இனத்தின், பொது நலத்தை உயர்த்துவதற்கு உகந்த முறையில் சிந்திக்க வேண்டும். இந்நாட்டில் பெயரைப் பெற்றிருக்கும் அரசியற் கட்சிகள் யாவும் தங்களுடைய வளர்ச்சிக்கு அங்கமாக வாலிப முன்னணியினரையே நம்புகின்றன. அவர்களைத் தமது அங்கமாக இணைத்துச் செயற்படுத்துகின்றன. ஒவ்வொரு கட்சியின் கொள்கைகளும் குறிப்பிட்ட வாலிப இயக்கத்தின் உத்வேகத்தினால் ஓங்கவே செய்கின்றன. எனவே இளைஞர்களாகிய நாங்கள் எமது சிந்தனையைக் கடிவாளம் அற்ற குதிரையைப் போல் தனது போக்குக்கமைய ஓடவிடாது - நிதானத்துடனும் புத்திசாதுர்யத்துடனும் செலுத்த வேண்டியவர்களாகின்றோம்.

இலங்கையில் பல்வேறுபட்ட இனத்தவர்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் தனிப்பட்ட பண்பும் கலாச்சாரப் பெருமையும் உண்டு. "பெற்ற நற்தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலு நனி சிறந்தனவே" என்கின்றான் உலகப் பெருங்கவிஞன் பாரதி. தேசிய உணர்ச்சியோடு நாட்டிற்கு உழைக்கவேண்டும் என்பதை நெஞ்சகத்தே கொண்டு அவர் இதனை யாத்துள்ளார். யாம் இதன் உள்ளர்த்தத்தைப் புரிந்து செயற்படவேண்டும்.

இளைஞர்களுக்கு நிதானமான சிந்தனை வேண்டும். சிறந்த தகைமையுடைய தலைவனையே நாடவேண்டும். உணர்ச்சியை இலகுவாகத் தட்டியெழுப்பிவிடச்

சிலரால் முடிகிறது. ஆனுல் அந்த உணர்ச்சியைச் செயல்படுத்த முடியாது போனுல் அதனுல் பலன் கிட்டிவிடுமா? எமது நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மை மக்கள் சிங்களவர். தமிழ் மக்கள் விகிதாசாரத்தில் குறைந்தவர்கள் எனினும் இந்நாட்டின் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் வாழத் தமிழ்பேசும் மக்களுக்கு உரிமையுண்டு. அந்த உரிமையின் அடிப்படையில் அவர்கள் ஈழம் எங்கும் பரந்து செறிந்து வாழ்கின்றுர்கள். வடக்குக் கிழக்கு மாகாணங்களை மட்டும் நம்பிக்கொண்டு நம் முன்னேர் இருக்கவில்லை. பல கஷ்டங்களுக்கூடே நாட்டின் பல பாகங்களிலும் தம்மை மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் தம்மை உயர்த்திக் கொண்டனர். இன்றைய இளைஞர்களாகிய நாமும் ஒரு குறுகிய இடத்துக்குள் முடங்கி விடாது எல்லை கடந்து எங்கும் பரந்து நல் வாழ்க்கை வாழவேண்டும். எமது மாகாணங்களோ பல துறைகளில் பின் தங்கியுள்ளன. பல முன்னேற்றத் திட்டங்களைப் போட்டு நம் பகுதியை வளம்படுத்தினுலும் ஏனைய பகுதிகளைப் புறக்கணித்து வாழமுடியாதவர்களாய் இருக்கின்றேம். ஆகையால் இனத் துவேஷத்துக்குள்ளாகாத தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை வளர்க்க வேண்டியது எங்கள் கடமையாகும்.

நேர்மையான கொள்கையை நெஞ்சில்நிறுத்தி அதன் இலட்சியங்களுக்காக உழைத்து வெற்றிகாண வேண்டிய இளைஞர்கள் பலர் தமது உற்சாகத்துக்கும் முயற்சிக்கும் தகுதியான பெறுபேறுகள் பெறமுடியாதவர்களாகிவிட்டனர். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? ஸ்திரமான கொள்கை வலுவும் திறமையும் இன்மையேயாகும். இளைஞர்களின் உள்ளத்தில் எழுகின்ற நல்லுணர்ச்சியை வெளிப்படுத்தி ஆக்கபூர்வமான காரியங்களில் அவர்கள் இயங்குவதற்கு, வழியமைக்க வாலிப முன்னணிகள் இன்று காத்திருக்கின்றன. வாலிப முன்னணி உற்சாகமுள்ள இளைஞர்களால் இயக்கப்பட வேண்டிய ஒன்று. இன்று இளைஞர்களாக விருந்து எதிர்காலத்தில் பொறுப்புள்ள பிரஜைகளாக விளங்கப்போகும் நாம் எம்மை உயர்த்தி ஆக்கங்காண வாலிப முன்னணிகளில் உழைத்து வெற்றிகண்டு பூரண சுதந்திரத்துடன் வாழ்வோமாக.

வாழ்க தமிழ்மொழி!

வளர்க வாலிப முன்னணி!

——

---

**இன்றைய மாணவன் தனது கல்வியின் மூலம் ஒரு பதவியை, உயர்ந்த நிலையை விரும்புகிருன். இக்கல்வி முறை மாற்றப்படவேண்டும். அவன் முன்னேறும் ஒரு சமூகத்தின் சிறப்பான அங்கத்தினஞக இருக்கத் தகுதியான நிலையை அடையும் வகையிற் புதிய கல்விமுறைகள் அமையவேண்டும்.**

**— ஸ்ரீ எம். பிஜு பண்டிட் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது ஆற்றிய உரையிலிருந்து.**

உலகமே ஒரு நாடகமேடை. அதில் நாம் அனைவரும் பாத்திரங்கள்.

— சேக்ஸ்பியர்

---

பட்டதாரி வகுப்புக்கள் வரையிலான பாடப் புத்தகங்கள்,
உபகரணங்கள், புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்,
பிரபல ஆங்கில, தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள்,
சமய, சோதிட, வைத்திய, அரசியல் நூல்கள்

முதலியவற்றுக்கு

சிறந்த ஸ்தாபனம்

# பூபாலசிங்கம் புத்தகசாலை

*பஸ்தரிப்பு நிலையம் - 4, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.*

கிளை:

*புகையிரத நிலையம் - யாழ்ப்பாணம்.*

இன்றே விஜயம் செய்யுங்கள்! தொலைபேசி: 7430

# ராஜா கிறீம் ஹவுஸ்

(நவீன ஐஸ்கிறீம் ஸ்தாபனம்)

36, கஸ்தூரியார் வீதி. & 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*தரமான — சுவையான*

* ஐஸ் கிறீம் வகைகள் * குளிர்பானங்கள் * சிற்றுண்டி வகைகள்
ஐஸ் பழம் ✶ ஐஸ் சொக் ✶ ஐஸ் ஜெலி
ஸ்பெஷல் ✶ சொக்லேட் கிறிப்ஸ் ✶ ஸ்ரோபறி கிறீம்

மற்றும் விழாக்கள், களியாட்டங்கள் அனைத்துக்கும் தேவையானவற்றை குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# Bharath Studio

for

Quality Photograph
and
Personal Attention

T'phone: 252 **82/1, Kasturiar Road, Jaffna.**

# KAVITHA

**Tour & Travel Operators**

*For your travel documents :*
*Passports, Visa, Airtickets and*
*other formalities*
*Please contact*

*Head Office:*
91, Chatham Street,
P. O Box 95,
Colombo 1.

*Branch Office:*
126, K. K. S. Road,
Jaffna

*Cable:* KAVITHA, Colombo.

Telephone: Office : 29791
Residence: 28031

## வசந்தங்கள் தொடரட்டும்!.....

சோம. வேணுகோபன்
11 C

உமா விடுவிடுவென ஒரு கையில் 'ஹான்ட் பாக்'கையும் குடையையும் எடுத்துக்கொண்டு மறுகையில் 'பைலை' யும் எடுத்துக்கொண்டு "அப்பா! போய் விட்டுவாறன்'' என்று கூறியவாறு 'ஒவ் வீசு'க்குப் புறப்பட்டாள்.

அன்று அவளுக்குத் தலைநிறைந்த வேலை. நேரம் போனதே தெரியவில்லை. அன்று அரை நாள் லீவு போட்டுவிட்டு 'பிரண்ட்' ஜெயாவுடன் புதிய சினிமாவுக் குப் போவதாக ஏற்பாடு. சரியாகப் பன்னிரெண்டு மணியளவில் ஜெயா உமா வுக்குப் 'போன்' பண்ணினாள். "என் னடி உமா! உனக்கு மறந்துபோச்சா. இன்டைக்குச் சினிமாவுக்குப் போகோ ணுமே"

"ஓம்டீ, அதுக்குள்ளாகவே மறந்து விடுமா? கட்டாயம் வர்றேன். கலாவை யும் வரச்சொல்லடி'' என்று கூறி 'டெலி போனை' வைத்துவிட்டுச் சிறிது நேரம் கதிரையிலே களைப்புடனே சாய்ந்திருந் தாள். பின் பரபரவென்று மேசையில் கிடந்த 'பைல்' கட்டுக்கள் எல்லாவற் றையும் எடுத்து 'டிராயரில்' இழுத்துப் பூட்டிவிட்டு, அரை நாள் லீவு கோரி ஒரு தாளில் குறிப்பிட்டுவிட்டு மேசையில் இருந்த மணியை அடித்தாள். முன்னால் வந்து நின்ற 'பியோனி'டம் 'லீவு லெட் டரை ஜி. எம்' மிடம் கொடுக்கச் சொல் லிவிட்டு வெளியே வந்தாள். வெளியே வெயில் சுள்ளென்று எறித்துக்கொண்டி ருந்தது. 'கூலிங் கிளாசை' மாட்டிக் கொண்டு குடையை விரித்தவாறு தெரு வில் இறங்கி 'பஸ்ராண்டை' நோக்கி நடந்தாள்.

'பஸ்'சில் செல்லும்போது அவளது கடந்த காலச் சீவியம் மனதில் திரைப் படம் போன்று ஓடியது. பத்து வருடங் களுக்கு முன் நடந்த சங்கதி அது. அப் போது அவளுக்கு வயது பதினெட்டு. அவள் வீடு கடனிலே மூழ்கி இருந்தது. இந்தக் கவலையிலேயே அவள் அம்மா நோய்வாய்ப்பட்டுப் போய் விட்டாள். தந்தையும், தம்பியும் அவளும்தான் வீட் டிலே. கடன்காரன் வீட்டை ஏலம்போடப் போவதாகக் கூறிவிட்டுப் போய்விட் டான். அவளாலே சிந்திக்க முடிந்தது. ஆனால் எதையும் சாதிக்க முடியவில்லை. தம்பியோ சிறுபையன். நோயாளியான அப்பாவையோ நம்ப முடியாது. வீட் டிலே கிடந்த, தட்டுமுட்டுச் சாமான், அம்மா விட்டுப்போன சேலைதான் பெரிய சொத்து. இந்த நிலையில் என்னதான் செய்வது? அவள் தடுமாறினாள்.

இந்தச் சமயத்திலேதான் அப்பா விடம் அவர் வந்தார். அப்பா முன் வேலைபார்த்த 'கொம்பனி'யின் 'ஜெனரல் மனேஜரா'ம். வந்தவரும் அப்பாவும் நெடு நேரம் ஏதோ பேசினார்கள். கடைசியாக அவர் வெளியே வந்த அவளிடமும் ஏதும் பேசாமல் அவள் தம்பியின் கைகளில் எதையோ கொடுத்தார். அவர் சென்றபின் அவள் அப்பாவைப் பார்த் தாள். அவர் கையில் ஒரு தோல்பை இருந்தது. அவள் அது என்னவென்று கேட்கவும் இல்லை. அவர் சொல்லவும் இல்லை. பின்னேரம் அவள் தனியாக அம்மாவின் நினைவிலே கரைந்துகொண் டிருந்தபோது அப்பா செருப்பை வாச லில் கழற்றி வைத்துவிட்டு கை நிறைய சிற்றுண்டிப் பொட்டலங்களுடன் உள்ளே நுழைந்தார். திண்ணையில் ஆயாசத்து டன் சாய்ந்த அவருக்கு கைகால் அலம்பு வதற்காக செம்பிலே ஜலம் கொண்டு வந்து வைத்துவிட்டு அவள் கதவருகே

ஒருக்களித்து நின்று கொண்டாள். அப்பாதான் முதலில் பேச்சைத் தொடங்கினார். ''தங்கச்சி இப்ப உனக்குத் தெரியும் எங்கட நிலமை: நாள் விடிஞ்சதும் விடியாததுமாக கடன்காரன் வீட்டைக் காலிபண்ணச் சொல்லிவந்திடுவான். இந்த நிலைமையில் நான் யாரிடம் போவது? எங்க போறது! என்ன பிள்ளை பேசாமல் நிற்கிறாயே'' என்றவாறு வெற்றிலையைக் குதப்பி வெளியே துப்பினார். அவளுக்கு எல்லாம் புரிந்தது. இருந்தும் அவள் ஒரு பெண். அவள் மௌனமாக நின்றாள். அப்பா வெற்றிலையைத் துப்பிவிட்டு விஷயத்தை மெதுவாகச் சொல்லத் தொடங்கினார். அப்போது வந்தாரே 'அவரை'ப்பற்றிச் சொல்லிவிட்டு ''அவர் எங்களுக்கு உதவி பண்றன் என்கிறார். நமக்கு ஏற்பட்டிருக்கிற நிலமை அவருக்குப் புரிகிறது'' என்று தொடர்ந்தவரை இடைமறித்து அவள் ''நான் என்னப்பா செய்யோணும்?'' என்று கேட்டாள். ஒண்ணும் இல்ல; அவருக்கு உன்னைப் பிடிச்சிருக்காம். நல்ல மனுசன். நம்ம ஜாதியும்தான்.'' என்றவர் அவளை ஆராய்ந்து பார்த்தார். அவள் கண்களால் ஜலம் கொட்டத்தொடங்கியது. அப்பாவின் முகத்தைப் பார்க்கும் போதே அவளுக்குப் புரிந்தது. அவருக்கும் மனதுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் இந்த நிலையில் வேறு என்ன செய்வது. அவள் வெகுநேரம் அழுதுவிட்டு ஒரு முடிவுக்கு வந்தவள் போல் ''சரி நடப்பவற்றைக் கவனியுங்கோ'' என்றாள். அப்பா எதிர்பார்க்கவில்லை. அவருக்கு உதடுகள் துடித்து, கண்ணால் ஜலம் கொட்டத்தொடங்கியது. மேல்துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டு போவதைப் பார்க்க அவளால் சகிக்கமுடியவில்லை. அவளும் அழுதவாறே உள்ளே போனாள். அவளுக்குப் புரிந்த அளவில் பெரிய தியாகம் செய்கின்றோம் என்ற நினைப்பில் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டு அழுதாள்.

அதற்கப்புறம் என்ன! ஊரே மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு கல்யாணம் தடபுடலாக நடைபெற்றது. அவள் தனக்குள் கற்பனை பண்ணியபடிதான் கல்யாணம் நடந்தது. ஆனால் கற்பனை பண்ணிய மணமகன்தான் பக்கத்தில் வந்து அமரவில்லை. அதையிட்டு அவளால் விதியை நொந்து சிரிக்கத்தான் முடிந்தது. நடுத்தர வர்க்கத்துக்கே பெண்கள் ஒரு சாபக்கேடு போலும்; பெண்ணையும் கொடுத்து அதற்கீடாக பொன்னையும் கொடுக்கவேண்டும். இல்லாவிடின் சந்தர்ப்பம் பார்த்து பெண்ணையே மலிந்த விலைக்கு வாங்கி விடுவார்கள். நடுத்தரவர்க்கம் என்ற தளவாடியில் தெரியும் சமூகம் மிகவும் சீர்கேடாகத்தான் தெரிகிறது; பிறந்த வீட்டிலும் அழுகின்றனர்; புகுந்த வீட்டிலும் அழுகின்றனர். இதையெல்லாம் பார்த்து பணமென்னும் பிசாசு பல்லை இளிக்கிறது. உமா மூன்று நாட்கள்தான் கணவனோடு இருந்திருப்பாள். அவளுடைய கணவன் மூன்றாம் நாளே நெஞ்சு வலிக்கிறதென்று படுத்துவிட்டார். ஐம்பதைத் தாண்டியவராயிற்றே. கல்யாணத்தால் வயதைக் குறைக்கமுடியாதே. இனசனம் என்று ஒருவரும் இல்லை அவருக்கு. புது உறவான உமாவுக்கே தனது சொத்து முழுவதையும் எழுதிவிட்டு மண்டையைப் போட்டுவிட்டார். அவளது புதுத்தாலியின் மஞ்சள் காயமுன்னரே காரியங்கள் அனைத்தும் மள மளவென்று நடந்து முடிந்தன.

தகப்பனின் அனுமதியோடு உமா M.com வரையும் படித்து விட்டாள். தம்பியையும் M. B. B. S உக்கு படிப்பித்து விட்டாள். வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து வைராக்கியத்துடன் அவள் முன்னேறி இப்போது ஒரு பொறுப்பான பதவியில் இருக்கின்றாள். தியேட்டருக்கு முன்னால் பஸ் நின்றவுடன் அவளது கடந்த கால நினைவுகளும் தடைப்பட்டு நின்றன.

தியேட்டர் வாசலில் கலா உமாவுக்காக காத்திருந்தாள். உமாவைக் கண்டதும் ஓடி வந்தாள். ''உமா இப்பதான்

ஜெயா ரிக்கெற் எடுக்க உள்ளே போயிருக்கா. உன்னைக் கண்டாக் கூட்டிக் கொண்டு போகத்தான் நான் நின்டனான்." இருவரும் தியேட்டருக்குள் சென்றார்கள். நாம் வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்க்கும் போது பலர் சந்தோஷமாக வாழ்கின்றனர். பலர் சோகமாக வாழ்கின்றார்கள். உள்ளம் அழும் போது உதடு சிரிக்கும். உதடு அழும் போது உள்ளம் சிரிக்கும். உமா, ஜெயா கலா இம் மூவரையும் சமுதாயம் பார்க்கிற போது நிச்சயமாகத் தப்புக் கணக்குத்தான் போடும். நல்ல உழைப்பு விதம் விதமான உடுப்புக்கள், அடிக்கடி சினிமா ஆனால் உள் வாழ்க்கையில் இசைக்க மறந்த பாடல்களை யாருமே கவனிப்பதில்லை. அந்த வகையில் சொல்லப் போனால் உமாவின் வாழ்க்கை நமக்குத் தெரியும் தானே! ஜெயா பாவம் காதலித்து ஏமாந்தவள். காதலன் கைவிட்டு ஓடி விட்டான். அதனால் ஊர் அவள் வாழ்க்கையையும் குறைவாகத்தான் கனம் செய்கிறது. கலாவின் வாழ்க்கையில் எது நடக்கக் கூடாததோ அது நடந்தது. அவள் வாழ்க்கையையும் ஒருவன் பலவந்தமாகப் பறித்து விட்டான். அவள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பதே உமா, ஜெயா இவர்களின் நட்புப்பிணைப்பினால் தான். நொந்துபோன அம்மூவரின் வாழ்க்கையிலும் நட்பு எனும் சங்கிலியால் தம்மைப் பிணைத்துக் கொண்டு வாழ்கின்றனர்.

தியேட்டருக்குள் லைட் அணைந்து படம் தொடங்கியது. இந்த நாளிலே சினிமா எடுக்கிறோம் என்று சொல்லி விட்டு ஏதோ, ஏதோ எடுத்து பணத்தையும், மனத்தையும் பாழாக்குகிறார்கள். அப்படிப் பார்க்கிற போது இந்தச் சினிமா? ரொம்பவும் பரவாயில்லை. அப் படத்தின் கதை யதார்த்த வாழ்க்கைக்கு ரொம்பவும் ஒத்து அமைந்திருந்தது. படம் முடிந்து மூவரும் வெளியே வந்தார்கள். கலாதான் முதலில் தொடங்கினாள். "ஏண்டி உமா, யாருடீ டைரக்ரர்? உண்மையை அப்படி புட்டுப் புட்டு வைக்கிறாண்டீ" மூவரும் அந்த டைரக்ரரை மானசீகமாகப் பாராட்டினார்கள். காரணம் அப்படம் அவர்கள் வாழ்க்கையோடு மிகவும் ஒத்திருந்தது.

உமா இப்போதெல்லாம் அலுவலகம் விட்டதம் நேரே வீட்டுக்குப் போவதில்லை. தனது சக ஊழியனான ரவி சங்கருடன் மாலை வேளைகளில் பார்க்கில் நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான் வீடு திரும்புவாள். அவனும் அவளையும் அவளது கொள்கைகளையும் புரிந்து வைத்திருந்தான். அவளும் அவனைப் பற்றித் தெரிந்து வைத்திருந்தாள். அவள் மனதில் சலனங்கள் இல்லை. அவன் மனதில் சபலங்கள் இல்லை. ஆனால் இந்த நரகலோக வீதியில் ஒரு பெண்ணான அவளால் எவ்வளவு காலம் தனியாக நடக்க முடியும். ஆகவே அவளுக்கு ஒருவனின் நிழல் தேவைப்பட்டது. ஆனால் பல ஆண்கள் காதல், கத்தரிக்காய் எனத் திரிந்து விட்டுக் கடைசியில் செய்தவையைப் பற்றி அவள் கதை கதையாகக் கேட்டிருக்கிறாள். அவளுக்கு ரவிசங்கரைப் பற்றித் தெரியும். என்றாலும் துணிந்தவள் தயங்கினாள். ஒருநாள் ரவிசங்கர் "திருமணங்கள் எல்லாம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றன என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் பலபேரின் சீவியத்தைப் பார்க்கும் போது அங்கே சொர்க்கத்தின் சுவட்டையே காணமுடியவில்லை. விதி ஆட்டிப்படைக்குது. அதுக்கேற்பத்தான் மனிசனும் ஆடுகின்றான். எதற்கெடுத்தாலும் ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டே பழகி விட்டார்கள். இண்டைக்கு நம்ம சமுதாயத்திலே உணர்ச்சி பூர்வமாக வாழுறவங்கள் தான் அதிகம். அறிவு பூர்வமாக வாழ்பவர்கள் மிகக் குறைவு. உணர்ச்சி பூர்வமாக வாழத்தான் வேணும். நான் வேணாம் எண்டு சொல்லவில்லை. ஆனால்

அதேவாழ்க்கையாகக்கூடாது. உணர்ச்சி மனிதனை அழிக்கின்ற கேவலம் இந்த நூற்ருண்டில்தான் பெருகி விட்டது" என்றவன் தொடர்ந்து "உமா நீ எத்தனை காலம்தான் தனியாக இருப்பாய். நாம் நமது மனத்துக்குச் சரியென்று படறதை பட்டென்று செய்திடோணும். அதற்குப் பிறகு சமூகம் நம்மைப் பற்றி என்ன நினைக்கும். என்ன சொல்லும், என்று நினைச்சுப் பயந்து காரியத்தைத் தள்ளிப்போடறது நம்மை நாமே அழிக்கிறதுக்குச் சமானமாகும்" என்ருன்.

இப்போது ஜெயாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பம். அவளை உணர்ந்த அவன் 'ஒவ்வீசு' ஜீ.எம் அவளை மணக்க முன்வந்து விட்டார். சமூகத்தில் நிச்சயம் நல்லவர்களும் இருக்கத்தான் செய்கின்ருர்கள். கலாவை உமாவின் தம்பி டொக்டர் சிறீதரன் மணக்க விரும்பினுன். அவர்களின் கள்ளமில்லா அன்பை உணர்ந்த உமா அவர்களின் திருமணத்திற்குச் சம்மதித்தாள். எல்லோருடைய திருமணங்களும் முடிந்த பின்னர் ரவி சங்கர் உமாவைப் பார்க்கில் சந்தித்தான். "உமா நீ எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி இருக்கப் போறே? என் கொம்பனி எனக்கும் என் மனைவிக்கும் வெளிநாடு போவதற்கு ரிக்கெற் தருகிறது. உன் இறுதி முடிவென்ன? "எனத் தீர்க்கமாக கேட்டான். உமா மௌனமாக வெகுநேரம் அப்பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களையும், பூத்துக் குலுங்கிய மலர்களையும் நெடுநேரம் பார்த்தவண்ணம் இருந்தாள். பின் "அந்த ரிக்கெற் உங்கள் மனைவிக்குப் பயன்படும்." என்றவளை ரவி சங்கர் இடைமறித்து "அது உன்னைத் தவிர வேறுயாருக்கும் பயன் படாது." என்ருன். அவன் கண்கள் உணர்ச்சியால் கலங்கின. உமாவின் கரம் அவனுக்காக நீண்டது. இருவரும் பிரிக்க முடியாத பந்தத்தால் கரங்களைப் பிணைத்தவாறே வெளியே நடந்தனர். பார்க்கில் சிறுவர்கள் 'நீ தான் எனக்குச்சோடி' இல்லை 'நான் உனக்குச் சோடி' எனக் கூவி விளையாடிக் கொண்டிருந்தனர். அவளது வாழ்க்கையில் வசந்தம் ஆரம்பித்து விட்டது. அது தொடரட்டும். ...

[யாவும் கற்பனை]

*With the Best Compliments*

*from*

**Lingams Silk House**

*18, Model Market, Jaffna.*

T'phone: 7684

&

**Sothy Textiles**

*14, Model Market, Jaffna.*

T'phone: 7562

காலை, மாலை, மதிய, இரவு

போசனங்களுக்கும்

சுவையான சிற்றுண்டி வகைகளைச்

சுவைத்தின்புறவும்

சிறந்த சைவ போசனசாலை

★

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**

239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## வெட்கமில்லையா ? | 'கதிர்ச் செல்வன்'

வேற்று நாட்டுக் கரிசி ஏற்றி
வேண்டும் மட்டும் உண்ட நாம்
சோற்றுக் கரிசி இல்லையென்று
சொல்ல வெட்கமில்லையா?

ஈழம் நிறையக் குளமிருந்தும்
இயற்கை தந்த நிலமிருந்தும்
வாழவழி இல்லை என்று
வருந்தி வாடும் மாந்தரே!

நாட்டைச் சுற்றி வேலை தேடி
நம்பி வீணே அலையாமல்
காட்டை வெட்டிக் களனி செய்தால்
காலமெல்லாம் உண்ணலாம்.

வாடும் உள்ளம் மலர்ந்திடும்
வறுமைப் பேயும் அகன்றிடும்
நாடும் உன்னைப் புகழ்ந்திடும்
நலமாய் வாழ்வும் அமைந்திடும்!

*

சிறந்த குணங்களையுடையவர்கள் அத்தகைய குணங்கள் இல்லாதவர்களைப் பார்த்து வெறுப்பது மனித சுபாவம். ஆனால் உண்மை வீரனும், மகாத்மாவுமாகிய அர்ச்சுனன் உத்தரனுடைய கோழைத்தனத்தை இகழவில்லை. அவனுக்குத் தைரியம் கூறிப் புகழ் சம்பாதித்துக் கொடுத்தான். இதுவே தனஞ்சயனுடைய தனிச்சிறப்பாகும்.

வியாசர் விருந்தில் மூதறிஞர் ராஜாஜி

★

கடற்கரைக்குப் போனோம்
கரையில்நின்று பார்த்தோம்
அடிக்கும் அலைகள் கண்டோம்
ஆனந்தம் கொண்டோம்.

— கவிஞர் நீலாவணன்


மோட்டார் உபகரணங்கள்

V

துரை

" ஆர் . ஜி . பில்டிங் "

66 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Phone: 7152

**S. Muttukumaru & Son**

Prop: S. M. KANAGARATNAM

MANUFACTURING JEWELLERS

*175, K. K. S. Road - Jaffna.*

Your Orders Promptly Executed

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

சி. முத்துக்குமாரு அன் சன்

நகை வியாபாரம்

175, காங்கேசன்துறை றோட், யாழ்ப்பாணம்.

*With the Best Compliments*

*from*

M. Nagaratnam & Co.

62, Stanley Road,
Jaffna.

*Space Donated*

*By*

S. Sivagadadcham & Co.

2, STANLEY ROAD,
JAFFNA.

*Space Donated*
*By*

Sri Lanka Book Depot
&
Sri Lanka Printing Works

234, K. K. S. ROAD, JAFFNA.

*Space Donated*
*By*

**Yarl Metal Industries**

250, 254, K. K. S. Road, JAFFNA.

T' pohne 7049

## திரை மறைவில் சில உண்மைகள்!

சி. மகேசன்
11 C

காலைப் பொழுது கலகலத்து மகிழவில்லை. கனத்துடனே அழுதது. காகங்கள் வைகறையை நோக்கிக் கரையவில்லை. வரப்போவதை எண்ணிக் கதறின. தரையிலே தளிர் விட்டிருந்த புல்களின் நுனிகளில் அரும்பியிருந்த பனித்துளிகள் பரவசப்படுத்தவில்லை. பரிதாபத்துக்குரிய சோகக் கண்ணீர்த் துளிகளாகவே தென்பட்டன.

இந்த இயற்கையின் வனப்புக்களை காத்தாயி கண்குளிரப் பார்க்கவில்லை. கண்ணீரோடுதான் பார்த்தாள். எஸ்டேட்டின் சாதாரணப் பெண் தொழிலாளிகளில் அவளும் ஒருத்தி. இரண்டு நாட்களாக தேயிலைக் கொழுந்து நுள்ள அவள் போகவில்லை. இன்றைய சாப்பாட்டைக் கூட அவளால் நினைத்துப் பார்க்க முடியாது. பக்கத்துக் காம்பருக்களில் வாங்கிய கடனை இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை. இந்த நிலையில் அவள் மீண்டும் ஒரு பேணி அரிசி கடன் கேட்டால், காம்பரு வாசிகளுக்கே உரித்தான "செந்தமிழில்" உபசாரம் (அபசாரம்) நடக்கும். அதுவும் பக்கத்து வீட்டுச் செல்லம் வாய் திறந்தால் எஸ்டேட் சங்கு ஊதும் வரை மூடாது.

அவள் பெருமூச்சுடன் உள் அறைப் பக்கம் தனது பார்வையைச் செலுத்தினாள். அவளுடைய மகன் பாலன் பரவிவிட்ட பழந்துணிகளுள், கிழிந்த துணியாகக் கிடந்தான். இரவு சாப்பிடாத மயக்கம் அவனை இன்னும் சில மணித்தியாலம் உறங்கவைக்கும். அதன் பின் அவன் எழுந்து அம்மா பசிக்கிறது என்றால் அவள் என்ன செய்வாள்! பக்கத்து ஆற்றில் ஓடுகின்ற தண்ணீரைக் குடிக்கலாம் என்றால் அங்குள்ளோருக்குக் கொலராவாம். அவள் புருஷனும் பாலன் பிறந்த வருஷமே அக்கொலராவுக்குப் தான் பலியானான். கொலை நடந்தால் கூட காத்தாயி பயப்படமாட்டாள். கொலரா என்றால் அவளுக்குக் குலைப்பனே வந்துவிடும். தன்மகன் பாலன் அந்தப்பக்கமே போகக்கூடாது என்பதற்காக அவனை தோட்டப்பள்ளிக்கு அனுப்புவதையே நிறுத்திவிட்டாள்.

அவள் இலங்கைக்கு வரும் போது அவளுக்குப் பத்து வயது. பத்து வயதிலேயே அவள் பல ஆகாசக் கோட்டைகளை பாக்கு நீரிணையிலேயே கட்டிவிட்டாள். அவை அனைத்தும் அக்கடலிலேயே கரைந்துவிட்டன. எங்கே இன்பம் இருக்கும் என அவள் நம்பிவந்தாளோ அவ்வின்பத்தை எல்லாம் இக்குறிஞ்சிமண் உறிஞ்சிவிட்டது. துன்பத்தைத் தவிர அவள் வேறொரு இன்பத்தையும் காணவில்லை. துன்பமயமான வாழ்விலே துன்பமும் இன்பமும் உணரமுடியாத பொருட்கள்தானே! இந்நிலையில் தான் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். பாலன் இங்கிருந்தால் பசிக்கு உணவும் கிடையாது பாழாய்ப்போன கொலராவும் அவன்மீது பாய்ந்துவிடும். பக்கத்துக் காம்பருப் பரமலிங்கண்ணை அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று வருகிறவர். அவர் அவ்வப்போது யாழ்ப்பாணத்தவரைப்பற்றி நிறையச் சொல்லுவார். யாழ்ப்பாணத்துச் சனங்கள் மிகவும் நல்ல சனங்களாம். தோட்டத்தொழிலாளிக்காக அவர்கள் போராடுகிறார்களாம்! இதையெல்லாம் கேட்டபிறகுதான் காத்தாயிக்கு அந்த யோசனை

உதயமாகியது. பாலனையும் யாழ்ப்பா ணத்துக்கு அனுப்பிவைத்தால் என்ன? இதைப்பற்றிப் பரமலிங்கண்ணையிடமும் சொல்லிவைத்தாள் போனகிழமை யாழ்ப் பாணம் சென்ற அவர் இன்று தோட்டத் துக்குத் திரும்புகின்றார். அவர் வருகை யைத் தான் காத்தாயி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் எதிர்பார்த்தது வீண்போக வில்லை தூரத்தில் பரமலிங்ககண்ணை தான் வந்து கொண்டிருந்தார். அவர் வந்ததும் வராததுமாக அவள் கேட்கின் றாள். ''என்னண்ணே! விசாரிச்சேங் களா? பரமலிங்கத்தார் திண்ணையில் அமர்ந்து கொண்டார். ''ஆம்மா! விசா ரிச்சேன். நல்லூருக்குப் பக்கத்தில ஒரு மாஸ்ரர் வீடு. வேலைக்காரப் பொடியன் தேவையாம். நாளைக்கே கூட்டிக்கொண்டு வரட்டாம்.

காத்தாயிக்குத் திடீரென்று பயம் உண்டாகியது. "என்னண்னே அவங் கள் நல்ல சனங்களா?''

''அருமையான சனம். அந்த வாத் தியார் ஊரிலேயே நல்லவரென்று பெய ரெடுத்தவர். தங்கமான மனசு. கனக லிங்கமெண்டு பெயரு''

காத்தாயி சொந்த மண்ணிலும் வந்த மண்ணிலும் தன்னைத் துன்புறுத்திய கடவுளையே இன்னமும் நம்பினாள். இவ் வளவு நல்லவனென்று பரமலிங்கண்ணை யாரால் வர்ணிக்கப்பட்ட கனகலிங்க மாஸ்டரை கடவுளுக்கு மேலாக நம்பி னாள். அவள். நம்பித்தானே ஆகவேண் டும். கணக்கை எழுதியவன் அக்கணக் கைமுடிக்குமுன்னர் காற்றினில் கலந்து விட்டான் எந்த நம்பிக்கையில் அவள் இப்போது வாழ்கின்றாள்! ஏழைகளிடம் இருக்கும் ஒரேயொரு செல்வம் நம்பிக் கைதானே! அந்தச் செல்வம் மட்டும் இல்லாதிருந்தால் அவர்கள் எப்போதோ மண்ணோடு மண்ணாகி இருப்பார்களே. அவர்கள் அவ்வாறு மண்ணோடு மண் ணாகியிருந்தால் வெறும் வாயை மெல் லும் அரசியல்வாதிகளுக்கு 'ஏழைகள்' என்ற அவல் கிடைத்திருக்காதே!

காத்தாயி சுறுசுறுப்புடன் காரியங் களைக் கவனித்தாள். பரமலிங்கத்தார் கொடுத்த இருபது ரூபாவை வாங்கும் போது அவரை ஒரு தெய்வமாக நினைத் துக் கொண்டு பயபக்தியுடன் வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். ஆனால் அந்தத் 'தெய்வம்' கனகலிங்கம் மாஸ் டரிடம் அட்வான்சாக வாங்கிய ஐம்பது ரூபாயில் முப்பது ரூபாவை கொமிஷ னாக அடித்து கொழும்பு சாரயக் கடை களில் கரைத்துவிட்டு வந்த வரலாறு இருபது ரூபாவை வாங்கிக் கொண்ட காத்தாயிக்கு தெரியாதே! பாலனை எழுப்பி முகம் கழுவி உடை அணிவித்து பரபரப்புடன் சமையல் செய்து அவனை வயிறார உண்ணச் செய்தாள். பிரயாணத் தின் போது சாப்பிடுவதற்கும் கட்டிக் கொடுத்தாள். மிகுதிப் பணத்தையும் அவ னது பிரயாணச் செலவுக்காக பரமலிங் கண்ணையிடமே கொடுத்து விட்டாள். பாலனுக்கு அம்மா தன்னை யாழ்ப்பா ணத்துக்கு அனுப்புகின்றாள் என்பதில் மட்டற்ற சந்தோஷம். ஆனால் அந்தச் சந்தோஷம் அம்மா தன்னை எதற்காக யாழ்ப்பாணம் அனுப்புகிறாள் எனத் தெரிந்தால் உண்டாகியிருக்குமா?

பெற்ற வயிறு பற்றி எரிய, பொங்கி வரும் கண்ணீரை அடக்கிக் கொண்டு தன் மகன் நன்றாக இருக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் விடை கொடுத்து அனுப்பினாள். அந்த அபலைத் தாய். தன் மகனை போர்க்களத்துக்கு அனுப்பிய வீரத்தாயைப் பற்றிப் பாடிய பாவலர்கள் ஏன் இந்தத் தாயைப் பற்றிப் பாடுவதில்லை?

பஸ் உறுமலுடன் புறப்பட்டது. பாலன் தன்னுடைய பெட்டியை இறுக்கிப் பிடித்தவண்ணம் பஸ்சில் இருந்தவர்கள் மீது பயத்தோடு தன் பார்வையைப் படரவிட்டான். முன் பின் தெரிந்தவர்கள் யாருமே அப் பஸ்சில் இல்லே. நிம்மதியுடன் பெருமூச்சு விட்டான். பெருமூச்சு விட்டதனுல் அவன் மார்பு எழும்பி சட்டைப்பையில் இருந்து கனத்துக் கொண்டிருந்த 'பொருளில்' முட்டியது. அவன் மனம் திக்கென்று அடித்துக் கொண்டது. பஸ்சின் வேகத்தோடு போட்டி போட்டுக் கொண்டு அவன் நினைவுகள் பின்னேக்கி ஓடின......

பரமலிங்கண்ணே பாலனே கனகலிங்கம் மாஸ்ரர் வீட்டில் கொண்டு போய் விட்ட சில நாட்கள் அவன் சந்தோஷமாகத்தான் இருந்தான். உற்சாகத்துடன் வீட்டு வேலேகளேச் செய்தான். ஆனுல் நாளா வட்டத்தில் வேலேக்காரன் என்பதால் விதிக்கப்பட்ட சட்ட திட்டங்களும், கட்டுப்பாடுகளும். மற்றைய அவன் வயதொத்த சிறுவர்களுடன் பாரபட்சமாக நடத்தப்படுதலும், அவனுக்கு வீட்டு நினேப்பையும், தாயின் கள்ளமில்லா வெள்ளேயுள்ளத்தின் பரிவையும் நினேப்பூட்டிக் கவலேயை உண்டாக்கியது. அந்நினேப்பால் வீட்டையும் அம்மாவையும் நினேத்து அவன் கரைய, அதனுல் அவன் வேலேகளில் தவறுகள் ஏற்பட, அதனுல் வீட்டுக்காரர்களால் தண்டிக்கப்பட, இந்நிகழ்ச்சிகள் நாட்செல்லச் செல்ல நித்தியமாகி விட்டன. தனது தவறுகளுக்காக தான் தண்டிக்கப்படுவதை அவன் குழந்தை மனம் கிரகிக்க மறுத்தது. இவ்வாறு ஒரு வருடம் உருண்டோடியது.

நேற்று அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். இனியும் இங்கிருந்து அடி வேண்டக்கூடாது. வீட்டிற்கு ஓடிவிட வேண்டும். வீட்டுக்குப்போவதற்கான பிரயாணச் செலவுக்கான பணத்தை அவன் நேற்றே எஜமானர் ஐயாவின் சட்டைப் பையில் இருந்து எடுத்துவிட்டான். எஜமானரும், எஜமானியும், பிள்ளேகளும் பள்ளிக்குக் கிளம்பிவிடவே அவனும் தனது பெட்டியுடன் கிளம்பிவிட்டான். அப்பிரயாணத்தின் முடிவை அவன் அடையப் போகிருன். இப்போது தனது ஊருக்குச் செல்லும் பஸ்சில் அவன் சென்று கொண்டிருக்கின்ருன். இன்னும் சில மணிநேரத்தில் அம்மாவைக் காணலாம். ''அம்மா நீ எப்படியிருக்கின்ருய்?'' உனது மகன் உன்னிடம் திருடனுக திருடனுக ஓடி வருகின்ருன். ஒரு பாவமும் அறியாத அவன் விதியின் கொடுமையால் சமுதாயத்தின் கண்ணேட்டத்தில் ஒரு திருடன்!

பஸ்சின் பெரியதொரு குலுக்கல் அவனே இவ்வுலகுக்குக் கொண்டுவந்தது. பக்கத்தில் இருந்தவர் கையில் அன்றைய தினசரிப் பேப்பரை மடித்து வைத்திருந்தார். அவன் தயக்கத்துடன் கையை நீட்டினுன். அவர் அவனே மேலும் கீழும் பார்த்துவிட்டு வேண்டா வெறுப்பாகப் பேப்பரைக் கொடுத்தார். படபடக்கும் இதயத்தின் திருட்டுத்தனத்தை மறைத்த வண்ணம் பேப்பரை படிக்க ஆரம்பித்தான். ஆம்! கனகலிங்கம் மாஸ்ரர் வீட்டில் இருக்கும் போதே அவன் எழுத்துக் கூட்டி வாசிக்கப் பழகிவிட்டான்.

பேப்பரில் முன்பக்கத்தில் ஒரு அறிவித்தல். ''எமது வீட்டில் வேலேக்கு நின்ற கம்பளேயைச் சேர்ந்த பாலன் எனும் இந்திய வம்சாவளிச் சிறுவன் நேற்று முன்தினம் வீட்டில் உள்ள பெறுமதிமிக்க பொருட்களேயும், பணத்தையும் எடுத்துக் கொண்டு தலேமறைவாகி விட்டான். கீழ்க்கண்ட அடையாளங்கள் உடைய அவனேக் கண்டவர்கள் எமது விலாசத்துக்கோ அல்லது பக்கத்தில் உள்ள பொலிஸ்ரேசனிலோ அறிவிக்கவும்..... கனகலிங்கம், நல்லூர்.'' கனகலிங்கம் மாஸ்ரர் மிகவும் கெட்டிக்காரர். உடனேயே பத்திரிகைக்கு அறிவித்தல் கொடுத்து விட்டார். பத்திரிகையில் செல்வாக்கான எழுத்தாளர்தானே அவர்.

அவன் இதயம் படபடத்தது. பக்கத்தில் இருப்பவர் தன்னை அடையாளம் கண்டு கொள்வாரோ? முகத்தில் துளிர்த்த வேர்வையை கைகளால் துடைத்துக் கொண்டான். அந்த அறிவித்தலுக்குக் கீழே இன்னொரு செய்தி. "கம்பளையிலே மண் சரிவு. ஒரு சங்கக் கடையின் முன்னால் பொருட்களை வாங்குவதற்காக நின்றிருந்த அனைவரும் இம்மண் சரிவில் அகப்பட்டுக் கொண்டனர்..... மரணமடைந்தோர் விபரம்...... காத்தாயி இராமசுவாமி...? ஐயோ! அம்மா! நீயும் போயிட்டியா?"

அவன் பத்திரிகையை பக்கத்தில் இருந்தவரிடம் திருப்பிக் கொடுத்தான். அவனால் அழமுடியவில்லை. எதிரே ஓடிக் கொண்டிருந்த காட்சிகள் நிலையில்லாத வாழ்க்கையின் நித்தியமற்ற நிழல்களாக அவனுக்குத் தெரிந்தன. இதயமே நொருங்கிப் போனதைப் போன்ற ஒரு உணர்ச்சி! அவன் மெதுவாக பஸ்சின் ஜன்னலோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

அவன் என்ன செய்வான்! யாரிடம் செல்வான்! திருடிய குற்றத்திற்காக என்றோ ஒரு நாள் பொலிசாரிடம் பிடிபடத்தான் போகின்றான். அவர்களிடம் சித்திரவதை. வாழ்க்கையில் அவன் செய்த தவறுக்காக வன்மையாகத் தண்டிக்கப்படுவான். அந்தத் தண்டனைகளினால் அவனது உள்ளம் மேலும் உறுதியடையும். பாவ, புண்ணிய உணர்ச்சிகள் சிறிது சிறிதாக அவனிடம் அற்றுப் போகும். மேலும் அவன் குற்றங்களைச் செய்வான்; இப்படி இந்நாட்டில் எத்தனை சிறுவர்கள்! இவர்கள் நாட்டின் சமுதாயத்தின் எதிர்கால மன்னர்கள், இவர்களை அங்கத்தவராக கொண்ட சமுதாயம் படிப்படியாக தேய்ந்து... தேய்ந்து......

எந்த மண்ணில் பிறந்தார்களோ அந்த மண்ணில் வாழவில்லை. வந்த மண்ணில் வசதியில்லை. அந்தரத்தில் சுழல்கின்றனர். வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போன்ற கொடுமைகள். இவர்களை..., இவர்களை வஞ்சிக்கும் அரசாங்கத்தாலோ, வாழ்த்துகின்ற வாய்ப்பேச்சு அரசியல்வாதிகளினாலோ. திறமை மிக்க சமுதாயச் சிற்பிகளினாலோ தொழில் நிபுணர்களாலோ, விஞ்ஞானிகளாலோ. தத்துவஞானிகளாலோ, ஏழைகள்... ஏழைகள் என்று வெற்றுத்தாளில் பேனா முனையால் கண்ணீர் விடும் எழுத்தாளர்களாலோ காப்பாற்ற முடியுமா? இப்போது இந்த பஸ்வண்டி எங்கு சென்று கொண்டிருக்கின்றது என்பது உங்களில் யாருக்காவது தெரியுமா?

[யாவும் கற்பனை]

---

சிறைகள் பூட்டப்படுவன மட்டுமல்ல. அவை திறக்கப்படவும் வேண்டும். இல்லையெனில் அவை தகர்க்கப்பட்டுவிடும். — ஜெயகாந்தன்

"என்னுடைய பேனாவில் எத்தனையோ ஜனாதிபதிகள், சர்வாதிகாரிகள், மந்திரிகள், எல்லோரும் அகப்பட்டுத் தத்தளித்திருக்கிறார்கள். இத்தகைய உயர்ந்த பதவியில் இருக்கும் என்னை எம். எல். ஏ. என்ற தாழ்ந்த நிலைக்கு ஏன் இழுக்கிறீர்கள்" என்று தம்மைத் தேர்தலில் போட்டியிடுமாறு கூறியவர்களிடம் பேராசிரியர் அமரர் கல்கி திருப்பிக் கேட்டாராம்.

— சாண்டில்யன்

---




# FITTEXT

9 (18), Grand Bazaar, Jaffna.

WORK SHOP;-

**FITTEXT**

*Space Donated By*

# Luxmi Vilas

205, K. K. S. ROAD, JAFFNA.

யாழ்நகரில் நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்!

# ஐங்கரன்

பலசரக்கு மாளிகை

280, (102) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம்: பலசரக்கு சாமான்கள் குழைந்தைகளுக்கான பால்மா வகைகள் அழகு சாதனப் பொருட்கள் பிஸ்கட், சொக்லேட் வகைகள், விவசாய இரசாயனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் புதினப் பத்திரிகைகள், வாழ்த்து இதழ்கள், சாய்ப்புச் சாமான்கள் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**IYNKARAN - Jaffna**

# சேர். பொன். இராமநாதனின் கல்வித் தொண்டு

அ. லிங்கநாயகம்
*11 A*

*1890* ம் ஆண்டில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் கொழும்பில் ஒரு தேசிய — இந்துக் கல்லூரியை நிறுவ விரும்பினர். இக்கல்லூரி ஏனைய கல்லூரிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என்பது அவர் விருப்பமாகும். இவ்வாறன கல்லூரிகள் பௌத்த — இந்தக் கலாச்சாரங்கள் சங்கமிக்கும் இடமாக அமைய வேண்டும் என அவர் எண்ணினர். இளம் மாணவர் தம் காலத்தில் சுதந்திர ஒற்றுமையான இலங்கைக்கான அத்திவாரத்தை கல்லூரிகளில் பெற்று தேசிய ஒற்றுமைக்கும், வளத்துக்கும் உதவுபவர்களாக விளங்கவேண்டும் என விரும்பினர். இந்த முயற்சியின் ஆரம்பத்தில் சிங்கள — தமிழ் பிரமுகர்களை கூட்டி தம் விருப்பத்தைத் தெரிவித்தார். இதற்காக நன்கொடையையும் வழங்கினர். ஆனல் சிங்கள — தமிழ் அறிஞர்களுக்குள் நிகழ்ந்த அபிப்பிராயபேதம் காரணமாக இத்திட்டம் நிறைவேறவில்லை. மேலும் பௌத்தர்கள் தமக்கென ஒரு கல்லூரியை நிறுவும் நோக்கமாகத் தற்போதைய ''ஆனந்தாக் கல்லூரியை'' நிறுவினர்கள். தமிழர்கள் வேறுவழியின்றி விலகினர்கள். சேர். பொன். இராமநாதன் ஏற்கனவே நன்கொடையாக வழங்கியதை கொழும்பு சைவ பரிபாலன சபைக்கு மாற்றினர்.

*1890* ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த போது யாழ்ப்பாணமாவட்டத்தின் நாலா பக்கமும் இருந்து வந்த மக்கள் மத்தியில் அவர் உரையாற்றும் போது சைவ பரிபாலன சபையின் கல்வி நோக்கங்கட்கு அதிக ஆதரவு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்துக்களுக்கென சைவப் பாடசாலையொன்றை (தற்போதைய இந்துக் கல்லூரி) உருவாக்க தம்மால் ஆன உதவியை செய்வதாகவும் வாக்களித்தார். மேலும் நன்கொடை வழங்கி ஒரு நிதியை ஆரம்பித்தார். இன்றைய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அவரது அபிலாஷைக்கும், அவாவிற்கும் நிலைபேருன நிலையமாக அமைந்துவிட்டது. குடாநாட்டில் உள்ள அநேக இந்துப்பாடசாலைகள் அவரது வழிகாட்டலால் தோன்றியவையே.

கொழும்பில் தேசியக் கல்லூரி ஸ்தாபிப்பதில் எடுத்த முயற்சி பலிக்காது போகவே யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கான உயர் கல்வி நிலையமொன்றை நிறுவ பெருமுயற்சி எடுத்தார். இவரிடம் பெண்கல்விக்கான ஈடுபாடு பிரமிக்கத்தக்க அளவில் விளங்கியதனல் பெண் கல்விக்காக தொண்டாற்றிய நிறுவனங்களுக்குப் பொருள் உதவியும், ஆன்மீக வலுவும் கொடுக்கத் தவறவில்லை. ஆண்களிலும் பார்க்க கூடியளவான சமய, ஒழுக்க நெறி படைத்த பெண்கள் தேசிய புத்துணர்வைத் தூண்டுவதில் மேம்பாடுடையவர்கள் என்ற அசையாத நம்பிக்கையை இராமநாதன் அவர்கள் கொண்டிருந்தார்கள். ''ஒரு ஆண் மகனுக்கு கற்பிக்கும் போது அது ஒரு தனியொருவனுக்கு கற்பிப்பதாகும். ஆனல் பெண்ணுக்குக் கற்பிக்கும் போது அது ஒரு முழுக்குடும்பத்துக்கும் கற்பிப்பதாகும்'' என்ற உண்மையை உணர்ந்த அவர் இந்தப் பெண்பிள்ளைகள் இந்துச்சூழலில், இந்துகலாச்சாரப் பின்னணியில், இந்து வாழ்க்கை முறையைக் கைக் கொண்டவர்களாக, வளரவேண்டும் என்ற பேரவாவின் இலக்காக இராமநாதன் பெண்கள் கல்லூரியை நிறுவினர். ஆண்களுக்கென அநேக கல்லூரிகள் இருந்தும் பெண்களுக்கென ஒரு கல்லூரியேனும் இல்லாத குறை

அவரை இத்துறையில் அதிக கவனஞ் செலுத்தத் தூண்டியது. இக்கல்லூரியை ஆரம்பித்தபோது மிசனரிமாரிடம் இருந்து வந்த எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. ஏராளமான பணம் செலவழித்து நவீன கல்லூரிக்கான வசதிகளுடன் உறுதிவாய்ந்த கட்டிடத்தை அன்றே அமைத்தது அன்னாருடைய தீர்க்க தரிசனத்தைக் காட்டுகிறது. *1913*-ம் ஆண்டு யூன் மாதம் 20-ந்திகதி இக் கல்லூரி ஆரம்பமாகியது. அன்றைய தினம் யாழ்ப்பாண மக்களின் ஏகோபித்த களிப்பு நாளாகும். அன்று தொட்டு இன்றுவரை இக்கல்லூரி அவ்வாறே விளங்கிவருறது.

பெண்களுக்கென இராமநாதன் கல்லூரிபோல் ஆண்களுக்குப் பரமேஸ்வரக் கல்லூரி அமைக்கப்பட்டது. அன்று கல்லூரியாக அரும்பிய அவர் முயற்சி இன்று பல்கலைக்கழகமாக மலர்ந்து விட்டது. இவ்வேளையில் அவர் தம் பெருந்தொண்டை நினைவு கூராமல் விட முடியுமா?

இராமநாதன் கல்லூரி சேர். பொன். இராமநாதன் அவர்கள் பெண்களுக்கென ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியையும் நிறுவினர். இது ஆசிரிய பயிற்சிக்காக மிசனறிமாரிடம் அறிந்தவர்களுக்கு ஒரு நற்செய்தியாக இனித்தது. இராமநாதன் அவர்கள் தனது கல்லூரிகளுடன் சமயவழிபாட்டிற்கென கோயில்களையும் அமைத்தார். மாணவர்களுக்கு கல்வியை மட்டுமன்றிச் சமய அறிவையும் சமய வழிபாட்டையும் கலந்து இக்கல்லூரிகள் மூலம் ஊட்டினர். இக்கல்லூரிகளில் போதனைக்காக தமிழும், ஆங்கிலமும் இருந்த போதிலும், தமிழில் உயர்ந்த கல்வியை பெறும் நோக்குடன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் எடுக்கப்பட்ட பாடவிதானம் பின்பற்றப் பட்டது.

இராமநாதன் அவர்கள் தமது சொந்தப் பாடசாலைகள் மட்டுமன்றி வேறு பாடசாலைகளை உருவாக்கவும் உறுதுணை புரிந்தார். கல்வித் துறையில் மட்டுமின்றி சமூக, சமய, கலாச்சார துறைகளிலும் நாட்டின் சுதந்திரத்துக்கும், மற்றும் பல முறைகளினாலும் தனது ஈழவழத் திருநாட்டுக்கு பெருந்தொண்டாற்றினர். அன்னாரின் பூதவுடல் அழிந்து விட்டாலும், அவரது செயற்கருஞ் செயல்களால் உருவாகிக் கொண்ட புகழுடம்பானது இலங்கை வாழ் மக்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும் வாழ்க! அவர் நாமம்.

---

சத்தியத்தின் பாதை எவ்வாறு நேரானதோ அவ்வாறே குறுகியதாகவும் இருக்கிறது. அகிம்சையின் பாதையும் அப்படிப்பட்டதே. அப்பக்கமோ இப்பக்கமோ சாய்ந்துவிடாமல் வாளின் முனையில் நிற்பதைப் போன்றதே இது. கயிற்றின்மீது நடப்பவன் தன் கவனத்தையெல்லாம் ஓரிடத்தில் நிலைக்கச் செய்வதால், அந்த வித்தையில் வெற்றிபெறுகிறான். ஆனால் சத்தியம், அகிம்சை இவற்றின் பாதையில் நடப்பதற்கு அதைவிட இன்னும் அதிகளவு கவனம் வேண்டும். சிறிதளவு கவனக்குறைவாக இருந்து விட்டாலும் கீழே விழுந்து விட நேரும். இடைவிடாது பாடுபட்டால்தான் சத்தியத்தையும், அகிம்சையையும் ஒருவர் அடையமுடியும்.

— 'அகிம்சை அல்லது அன்பு' என்ற கட்டுரையில் மகாத்மா காந்தி

---

யாழ். நகரிலே சிறந்த அச்சுவேலைகளை

தமிழ்

ஆங்கிலம்

சிங்களம்

ஆகிய மொழிகளில் அழகுறச்
செய்து தருபவர்கள்

யாழ். தங்கராஜா அச்சகம்,
39/3, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

Space Donated

By

**MALAYAN RECORDING SERVICE**

*121, Manipay Road,*
*Jdffna.*

*With the Best*

*Compliments*

*from*

**RAGUNATHAN**
**PATHIPPAHAM**

*Publishers & Book Sellers*

**303, Galle Road,**
**Colombo - 3.**

With Best
Compliments
from

**M/s. Ranajna Stores**

52, Bankshall Street,
Colombo 11.

நவீன மின்சார உபகரணங்கள், மின் சார மண்ணெண்ணையில் இயங்கும் நீர் இறைக் கும் இயந்திரம், எவரெடி பற்றரிகள், கசெலி சைசிக்கிள்கள், சி. பீ. ஈ. மின் பல்புகள், லோட்டஸ் ரயர், ரியூப்

இவைகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

## நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

*141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

கிளை: *440*, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- *7016*

C. S. F. TEXT

Tip Top Tailoring

18, JUMMAH MOSQUE LANE,
JAFFNA.

ஆடவர் விரும்பும் அழகிய
சேட்டிங், சூட்டிங் வகைகள்
குழந்தைகளுக்கான
றெடிமேட் உடைகள்
மற்றும் அழகுசாதனப் பொருட்கள்
யாவும் நிதான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

## மணியம் ரெக்ஸ்ரைல்ஸ்

நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7545

சுவையான சிற்றுண்டி வகைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்!

## பத்மா ஹோட்டல்
## PATHMA HOTEL

உரிமையாளர்:- J. குணரட்னம்.

419, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# நாயகன் நந்தி

ம. ஜெயகுமாரன்
11E

மூன்றும் நந்திவர்ம பல்லவனை நாயகனுகக் கொண்டு நந்திக்கலம்பகம் பாடப்பட்டது. இவ்வரசன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 847 முதல் கி. பி. 872 வரை ஆட்சி செய்தான் எனச் சரித்திர ஆசிரியர்கள் குறிக்கின்றனர். இவன் தமிழகம் முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததுடன். வடநாட்டையும் ஆண்டான். இவன் சிவபக்தியிலும் கல்வியிலும் போர்த்திறனிலும் வள்ளல் தன்மையிலும் சிறந்து விளங்கினுன். நந்திவர்மன் தெள்ளாறு என்னும் இடத்தில் பாண்டியரை வென்றதை பாரதம் பாடிய பெருந்தேவனுர் புகழ்ந்து பாடுகிருர்.

"வண்மையால் கல்வியால்
மாபலத்தா லாள்வினையால்
உண்மையற் பாராளுரிமையால் —
திண்மையால்
தேர்வேந்தர் வானேறத்
தெள்ளாற்றில் வென்ருனேடு
யார் வேந்தர் ஏற்பார் எதிர்?"

நந்திவர்மனின் பாறை கடுவாய் எனப் பெயர் கொண்டது.

திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில்

"கரையுறை வாண்மற மன்னர்
கெடக்கடல் போல் மூழங்கும்
குரல் கடுவாய்
பறையுடைப் பல்லவர் கோன்" எனச் சிறப்பிக்கின்ருர். இனி நந்திவர்மனைப் பற்றி நந்திக்கலம்பகம் கூறுவதைப் பார்ப்போம்.

நந்தியின் வீரம்:- நந்திவர்மனின் அழகான நீண்ட கண்கள் (கோபத்தால்) சிவக்குமாயின் பகையரசர்களின் ஊர்கள் (தீயினுல்) சிவக்கும். அவனுடைய ஒளியுடைய புருவங்கள் துடிக்குமாயின் அவனை வணங்காத அரசர்களுக்கு இடப்புறம் துடிக்கும். நந்தியின் வாள் உறையில் இருந்து நீக்கப்படுமாயின் பகைவரது மனைவியர் தாலியை இழப்பர். நந்தியின் சங்குக் கடுவாய்ப் பறை போல் மூழங்குமாயின் அவனேடு சேராத மன்னர்களின் மனம் பதைபதைக்கும். நந்தியின் போர்யானை அலங்கரிக்கப் படுமாயின் அவனை எதிர்த்த பகைவரது உடலில் உதிரம் உண்டாகும்.

…………… நந்தி நின்
திருவருள் நெடுங்கண் சிவக்குமாகிற்
செருநர் சேரும் பதி சிவக்குமே
நிரங்கினர் புருவம் துடிக்கின் நின் கழல்
இறைஞ்சா மன்னர்க்கு இடந்துடிக்குமே
மையல் வாள் உறை கழிக்குமாயின்
[—அடங்கார் பெண்டிர்
புணர் முலை முத்தப் பூண் கழிக்கும்மே.

கடுவாய் போல்வளை அதிர நின்னெடு
மருவா மன்னர் மனந்துடிக்கும்மே
மாமத யானை பண்ணின்
உதிர மன்னு நின் எதிர் மலைந்தோர்க்கே
(மை-இல் — குற்றமற்ற, வளை — சங்கு)

நந்தியின் கால்களில் யானையின் பிடர்பட்ட சுவடுகள் உண்டு. அச்சுவடுகளின் கீழ் பூவுலகத்தில் உள்ள அரசர்கள் நாள்தோறும் வந்து வணங்கும் போது அவர்கள் முடிகள் ஏற்படுத்திய வடுக்கள் உண்டு.

"சூழிவன் மதயானையின் பிடர்பட்டு
சுவடினவை; சுவட்டின் கீழ்
வாழியிந்நில மன்னர் வந்து அனுதினம்
இறஞ்சிய வடுக் கண்டோம்"

நந்திவர்மன் மூவேந்தரையும் மட்டுமின்றி வடநாட்டில் உள்ளவரையும்.

வெற்றி கொண்டு யானை, குதிரை என்பன வற்றை திறையாகப் பெற்ருன் என்பதை

"..........................
சேர சோழருந் தென்னரும் வடபுலத்து
அரசரும் திறை தந்த
வீர மாமத கரியிவை பரியிவை"

என்பதால் அறியலாம்.

## நந்தியின் கொடைச்சிறப்பு:—

புரவலர் எல்லோரும் நந்திவர்மனைப் பாடி பொருள் பெற்று பூமியை அரசாளத் தொடங்கிவிட்டனர். ஆகவே அவன் ஆட்சியில் இரவலர் யாருமில்லை. அப்படியே உண்டென்று கூறினுலும் அது இரவில் மலரும் குமுத மலரையே குறிக்கும்.

"இந்தப் புவியில் இரவலர்
உண்டென்பதெல்லாம்
அந்தக் குமுதமேயல்லவோ — நந்தி
தடங்கைப் பூபாலன் மேற்
தண் கோவைபாடி
யடங்கப் பூ பாலரானுர்."

நந்தியின் அரண்மனை முற்றத்தில் பகையரசர்களிடம் வெற்றி கொண்ட அவரது நாட்டையும், வீரமிக்க செல்வத்தையும், நந்தியை வணங்கும் அரசர்களைப் பெற்றுக் கொள்ளும்படி கடுவாய் முழங்கிக் கொண்டிருக்கும்.

"கொற்ற வாயின் முற்றத்தே
விண்ட வேந்தர் தன் நாடும்
வீரத்திருவும் எங்கோனைக்
கண்ட வேந்தர் கொண்மின்
என்னும் கன்னிக் கடுவாயே"

நந்திவர்மன் 'செருவென்ற பாரி' எனச் சிறப்பிக்கப் படுகிருன். கடையேழு வள்ளல்களில் ஒருவனுய பாரியை மூவேந்தர் போரில் வென்றனர். நந்தி மூவேந்தரை வென்றமையால் 'செரு வென்ற பாரி' யாகின்ருன்.

அரண்மனை வாயில் வழியே பரிசு பெற்றுச் செல்லும் புலவர்களின் நிலையை வர்ணிப்பதன் மூலம் நந்தியின் கொடைச்சிறப்பு வெளிப்படுத்தப்படுகிறது. அப்புலவர்கள் பல குதிரைகளோடும், யானைகளோடும், மயிலிறகால் ஆன குடையின் கீழ் அமர்ந்து வெளியேறினர். அவர்கள் புலவர்களோ அன்றி அரசர்களோ? அரசர்கள் நந்தியின் வாயிலில் குடைவிரிக்க மாட்டார்கள். ஆகையால் இவர்கள் புலவர்கள் தான்.

"பாடிய நாவலரோ, வேந்தரோ,
[பல்புரவிப்
பீடு இயல் மா களிற்ருர் பிச்சத்தார்"

நந்தியின் கொடைச் சிறப்பானது:-

"மண்ணெல்லா முய்ய மழைபோல்
[வழங்குகரத்
தண் உலா மாலைத் தமிழ் நந்தி"

என்னும் வரிகளில் பூரணமாக விளக்கப் பட்டுள்ளது.

## வேறு சிறப்புக்கள்:—

நந்திவர்மன் கல்வியிற் சிறந்து விளங்கினுன். இதனல் 'தொல்லை நூல் வரம்பு கண்டான்'. எனவும் 'நுற்கடற் புலவன்' எனவும் புகழப்படுகின்ருன். அவ்வாறே அவன் சிவபக்தியும் மிகுந்தவன். 'பிறை தவழ் செஞ்சடைப் பிறங்கல் நாரணன் அறைகழல் முடித்தவன் அவனி நாரணன்' எனச் சிறப்பிக்கப் படுகின்ருன். அதாவது பிறையை அணிந்த சிவபெருமானது திருவடியை திருமுடிமேற் கொண்டவன் நந்தி. 'சிவனை முழுதும் மறவாத சிந்தையான்' என இவன் நூலாசிரியரால் புகழப்படுகின்ருன்.

நந்தியின் ஆட்சித்திறனை நோக்குவோமாயின் அவன்— திருவும், செம்மையும், நில மகள் உரிமையும், பொதுவின்றி (தனக்கே உரிமையாக்கிக்

கொண்டு) ஆண்டான். அவனுடைய நாடு செந்நெற் பயிரையுடைய வயலிலே சென்று விழுகின்ற காவிரியாறு சூழ்ந்த நாடு. அவனது வெண் கொற்றக் குடையானது துன்பத்தின் நிழலானது குடிகளின் மேல் விழாமல் மறைக்கும் குடை. நந்தியின் படை வீரர்கள் விளங்குகின்ற கடல் போன்ற படை. நந்தியின் படையில் உள்ள யானைகளுக்குப் போர் செய்யாத நாள் வீணான நாளாக சினத்தை யூட்டும்.

நந்திவர்ம பல்லவன் இறந்தபோது அவனது குளிர்ந்த தன்மை நிலவை அடைந்தது. அவனது பெருமை கடல் சூழ்ந்த உலகத்தில் பரவியது. அவன் சீற்றம் காட்டில் உள்ள புலியினுள் புகுந்தது. அவனது வள்ளல் தன்மை கற்பக விருட்சத்தை அடைந்தது. அவனிடம் குடி கொண்டு இருந்த திருமகள் திருமாலை அடைந்தாள். அவனது உடல் தீயினுள் புகுந்தது. (அதாவது அவன் உடலில் உள்ள ஒளி தீயினுள் புகுந்தது) ஆசிரியர் இறுதியில் தன்னுடைய நிலையையும் கூறுகின்றார். "நந்தியே! எந்தையே! நானும் எனது துன்பமும் இனி எங்கே சென்று தஞ்சம் புகுவோம்."

"வானுறு மதியை அடைந்ததுன் தட்பம்
மறிகடல் புகுந்ததுன் பெருமை
கானுறு புலியை அடைந்ததுன் சீற்றங்
கற்பக மடைந்ததுன் கொடைகள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழ லடைந்ததுன் மேனி
யானுமென் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே! எந்தை பிரானே!

——

அவுட் போட் மோட்டர்,

மின் இணைப்புச் சாதனங்கள்,

மற்றும்

தண்ணீர் இறைக்கும் இயந்திரம்

திருத்துவதற்கு மிகச்சிறந்த இடம்

★

இ. பேரின்பமூர்த்தி

நரரந்தனை வடக்கு

ஊர்காவற்றுறை

## வெறியினால் ஒரு லொறி விபத்து!

மதுபோதையில் வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவர் மீது லொறியால் மோதியதாக லொறிச் சாரதி குற்றஞ் சாட்டப்பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப் பட்டார். விபத்துக்குள்ளான மனிதர் நீதிபதியின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் பின்வருமாறு நடந்த சம்பவத்தை விளக்கினார்.

"ஐயா நான் அன்று இரவு வீதிவழியே வந்து கொண்டிருந்தபோது விளக்கைப் போட்டவண்ணம் பக்கம் பக்கமாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வந்து கொண்டிருந்தன. வீதியின் இரு புறமும் அவை வந்து கொண்டிருந்தபடியால் நான் இரண்டிற்கும் இடையீல் சென்றேன். திடீரென்று என்னை ஏதோ ஒன்று மோதித்தள்ளியது. அப்போதுதான் விளக்கைப் போடாமல் அவ்விரு மோட்டார்ச் சைக்கிள்களுக்கும் இடையில் இன்னொரு மோட்டார்ச் சைக்கிளில் ஒரு மடையன் வந்திருக்கிறான் என்பது எனக்குப் புரிந்தது. —நன்றி:- விகடகவி—

அன்பளிப்பு

## முருகன் எலக்ற்றிக்கல் ஸ்ரோர்ஸ்

மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனையாளரும்

618, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

தந்தி : "கறன்ட்" தொலைபேசி: 7110

## Vasanthas Motor Mart

Dealears in Spares Fan, Scooter and Water Pumps

N. M. W. BUILDING,
44, STANLEY ROAD,
JAFFNA.

# நவீன சந்தையில் ஆண்மை

கு. ஸ்ரீஇரத்தினகுமார்
11 E

சந்தையில் ஆண்மை என்று கூறுமிடத்து சமுதாயம் என்னும் சந்தையையே குறிக்கிறது. ஏனெனில் எமது நாட்டின் நிலைமையைச் சிந்திக்கும் போது சந்தையின் நிலையும் ஆண்மையின் விலையும் நன்ருகப் புரியும். அவற்றிற்கும் இடையில் உள்ள தொடர்பும் புலனுகும். நமது நாட்டில் இப்பொழுது சீதனக் கொடுமை தலை விரித்து ஆடுகின்றது. இந்தச் சீதனக் கொடுமைக்கும் நாட்டின் பொருளாதார விருத்திக்கும் ஏதாவது தொடர்பு இருக்கும் என்று கருதினுல் அதில் பல உண்மைகள் புலப்படுகின்றன. மேலை நாடுகளில் பருவம் அடைந்தவுடன் மணமக்களின் விருப்பத்திற்கமைய திருமணம் நடைபெறுகின்றது. அந்தத் திருமணங்களை பெற்ருேர்களால் தடுக்கவோ, அன்றி நிறுத்தவோ முடியாது. சீதனப் பிரச்சனை இல்லாதது அந்நாடுகளின் பொருளாதார வளத்துக்கு ஒரு காரணமாக அமைகிறது.

எமது நாட்டில் உள்ள ஓர் கற்றறிந்த உயர் பதவியில் உள்ள ஆண் ஒரு இலட்சம் ரூபாய் முதல் பல இலட்சம் ரூபாய் வரை விற்கப்படுகின்ருன் என்பது யாராலும் மறுக்கமுடியாத ஒரு உண்மையாகும். ஒரு சாதாரண படித்த குடும்பத்தில் இருக்கும் பெண்ணின் தகப்பனுரிடம் ஒரு இலட்சம் ரூபாய் ஏது? எனவே அவர் எங்ஙனம் தனது மகளுக்கு ஒரு உயர்ந்த. தகுதியான மணமகனைத்தேடி கொடுக்க முடியும். ஆகையால் ஏழை தனது தகுதிக்கேற்றவாறே விலை கொடுத்து இன்னெரு ஏழையையே பெற்றுக்கொள்ள முடிகிறது. செல்வந்தன் தனது செல்வத்தின் மூலம் இன்னெரு செல்வந்தனையே வாங்கி விடுகின்ருன். சீதனப் பிரச்சனை ஒழியும்வரை ஏழை, பணக்காரன் பாகு பாடு தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஏழை ஏழையாகவே தன்னுடைய வாழ்க்கையை தொடர்கிருன். பணக்காரன் பணக்காரனுகவே பகட்டாக வாழ்கிருன். நாட்டின் பொருளாதாரம் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்குள் ஏழைகளினுல் தொய்வடைந்தும், செல்வந்தர்களுக்குள் பலமடைந்தும் ஆனுல் பயன்படுத்தப்படாது காட்சியளிக்கின்றது. நாட்டின் பெரும்பான்மை மக்களாக ஏழைகள் உள்ள எமது தேசத்தின் பொருளாதாரம் இதனுல் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

'குணம் பந்தியிலே பணம் குப்பையிலே' என்ற நிலைமாறி இன்று 'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம். அன்று ஏழையாகிய அம்பிகாவதி; அரசனின் செல்வ மகள் அமராவதியை அடைவதற்கு ஆயிரம் பாடல்களை காமக்குறி இன்றிப் பாட வேண்டியிருந்தது. இன்றிருந்தால் இலட்சம் ரூபாய் இனும் கேட்டிருப்பார்கள். செல்வம் வறுமை இரண்டிற்குமிடையில் இடப்படும் பாலத்தைத் தகர்க்க அந்நாளிலே அத்திவாரமிடப்பட்ட சட்டதிட்டங்கள் தானு இன்று இந்தச் சீதனப் பேயை உருவாக்கின. இச்சீதனக் கொடுமைக்கு மூலம் எது? உரம் எது? பரிகாரம் எது? என நாம் ஒவ்வொருவரும் மனிதாபிமானத்துடன் சிந்தித்து, விடையறிந்து செயற்பட வேண்டும்.

ஏன்? பெண்ணிற்கு ஆண் தட்சணை கொடுத்தால் என்ன? கட்டில்லாத ஆண்மையை அளக்க அளவு கோல் இல்லை. ஆனால் கற்பை அளக்க மட்டும் அளவு கோல் உண்டு. ஒரு ஆண் எத்தனை தரமும் தவறு செய்யலாம். ஆனால் ஒரு பெண் ஒரு முறை தவறிவிட்டால் அவளுக்கு பின் வாழ்வேயில்லை. பெண்மையின் இப்பலவீனத்தை மறைக்க சீதனம் அவசியம் தேவைப்பட்டது என்ற வார்த்தை முழுவதும் உண்மையல்ல. என்றாலும், ஓரளவு உண்மை இருக்கின்றதென்பதையும். இதில் சீதனப் பேயின் முக்கியத்துவத்தையம், சுட்டிக்காட்டுகிறது. கேவலம் இன்றைய இளைஞர்கள் பணத்திற்காகவே திருமணம் செய்கிறார்கள். ஒரு பெண்ணும், அவளது இளமையும் போதாதென்று, பணமும் வேண்டுமென நிற்பவர்கள் எவ்வளவு பேராசைக்காரர்கள்.

சமுதாயச் சந்தையிலே விலை உயர்ந்த வைரங்கள் போல் ஆண்கள் விற்கப்படுகிறார்கள். இது எமது சமுதாயத்திற்கு, பாரம்பரியம் மிக்க இனத்துக்கு ஒரு இகழ்ச்சி! நாட்டின் வளத்துக்கு ஒரு வீழ்ச்சி! உயர்ந்தவர்கள் உயர்த்தப் படுகிறார்கள். தாழ்ந்தவர்கள் தாழ்த்தப் படுகின்றனர். இந்நிலை ஒழிக்கப்படவேண்டும். இனி மேல் சீதனம் வாங்குவதில்லை என ஒவ்வொரு இளைஞனும் திடசங்கற்பம் கொண்டு, ஒரு திருத்தமான, புரட்சிகரமான சமுதாயத்தை கட்டியெழுப்ப முழு மூச்சுடன் போராட வேண்டும்.

---

தமிழர் அனைவரும் பண்டுபோல் தமக்கும் தம் இல்லங்களுக்கும், தம் மூர்களுக்கும், பிறவற்றிற்கும் எல்லாம் தூய தமிழ்ப் பெயர்களையே அமைத்தல் வேண்டும்.

— மறைமலையடிகள்

காதலுக்கு ஏற்ற மனநிலை வளர்வதற்கு முன்னமே உடல் நிலை வளர்ந்து விடுகிறது; தவறு செய்யத் தூண்டுதல் ஏற்படுகிறது. தவற்றிற்கு ஏற்ற தண்டனையும் கிடைக்கிறது.

— டாக்டர் மு. வரதராசனார்

## இயற்கையின் நியதி !

'தென்றல்'

வேனிற் கால வேளையிலே
 வேப்ப மரத்தின் உச்சியிலே
காலைக் கதிரின் ஒளியினிலே
 காகக் கூடொன்றைக் கண்டேனே!
கூடி இருந்த குஞ்சுகளில்
 கூ! கூ! என்றது ஒரு குஞ்சு !
ஓடிவந்த தாய்க் காகம்
 ஒருகணம் நின்றது திகைப்போடு !
கோபத்தோடு கொத்தியது
 கொல்ல எண்ணித் துரத்தியது!
உயிரைக் கையில் பிடித்தபடி
 ஓடித் தப்பியது அக்குஞ்சு!
பறந்து வந்த ஒரு குயில்
 பலா மரத்தில் அமர்ந்தது!
பதறிய அந்தக் குஞ்சிடம்
 பார்த்து இப்படிச் சொன்னது!
"இனிய குஞ்சே பதறாதே
 இயற்கையின் நியதி இதுதானே!"
குதூகலத் தோடு குயிற் குஞ்சும்
 கூ! கூ! என்று கூவியது!

***

---

ஞானம் என்ற மூலத்தில் இருந்துதான் விஞ்ஞானம், மெஞ்ஞானம் இரண்டுமே தோன்றின. இரண்டுமே ஒருமூலத்தை நம்புகின்றன. ஒருமூலமும் அறியாதவன் எதையும் நிர்மூலம் என்றே கருதுவான். மூலவித்து ஒன்றின் ரகசியமான பரிணாம வளர்ச்சிகளைத்தான். விஞ்ஞானம் கண்டுபிடித்ததே தவிர, மூலத்தைக் காணவில்லை. அறிவு ஆழமாக ஆழமாக முடிவு தெய்வ நம்பிக்கையாகும். ஆழமில்லாத முடிவு ஆத்திரத்தில்பெற்ற குழந்தையே நாஸ்திகம் !

— கண்ணதாசன்

---

குமாரன் ரூறிஸ்ட் இன்
Kumaran Tourist Inn

யாழ் நகரில் சகல நவீன வசதிகளுடனும் தங்கும் அறை வசதிகள்
— 24 மணிநேர சேவை

குறைந்த செலவு - நிறைந்த உபசரிப்பு - ஸ்பெசல் உணவு வகைகள்

இன்றே விஜயம்செய்ய மறவாதீர்கள்

67, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

சிறந்த புகைப்படங்களுக்கு

பிரபா போட்டோ

108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Space Donated
By

Victor & Sons
100, Stanley Road,
Jaffna.

* G. C. E. (A/L), * G. C. E. (O/L), * N. C. G. E. * H. N. C. E

* ஆறும் * ஏழாம் * எட்டாம் வகுப்புக்கள்

கலை, விஞ்ஞான பிரிவுகள்

விசேட ஆங்கில வகுப்புக்கள்

திறமைமிக்க சிறந்த ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன.

## சித்தி விநாயகர் சயன்ஸ் சென்ரர்

தலைமையகம் : அச்சுவேலி பஸ் நிலையம், அச்சுவேலி.

கிளை 1 : ஆடியபாத வீதி, கல்வியங்காடு.

„ 2 : யாழ்ப்பாணம்



* G. C. E. (A/L), * G. C. E. (O/L), * N. C. G. E, * H. N. C. E.

* ஆறும் * ஏழாம் * எட்டாம் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

கலை, விஞ்ஞான பிரிவுகள்

விசேட ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு : G. M. ராஜ்குமார், 15, ஸ்ரேசன் றேட், கோண்டாவில்.

## யுரேனஸ் இன்ஸ்ரிரியூட்

15, ஸ்ரேசன் றேட், — கோண்டாவில்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உயர்தர மாணவர் ஒன்றியம் (முதலாம் வருடம்)

கொண்டாடும் கலைவிழா

அவர்களது

அறிவு, திறன், செம்மை, இரசனை பிரதிபலிக்கும்

உயர் விழாவாக

அமைய

வாழ்த்து நல்கும்

ஒரு அன்பன்

# இன்றைய மாணவ மன்றங்களும் அவற்றின் எதிர்காலமும்

பா. பாலரவி
11 A

மாணவர்கள் நாட்டின் பயன்தரு செல்வங்கள். இவர்களை நாடிப் பற்பல பணிகள் எதிர்நோக்கியுள்ளன. இப்பணிகளைச் செயலாக்குமிடத்து மாணவர்கள் சமூகம், அரசியல், தொழில்நுட்பம், மனிதப் பெருமதியாகியவற்றுடன் சேர்ந்து இயங்கவேண்டும். அத்துடன் இவர்கள் பல்வேறு செயன்முறையான வளங்களை ஒருங்கே பயன்படுத்தித் தத்தம் குறிக்கோளை அடைய வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். எனவே மாணவர்கள் காலப்போக்கில் நாட்டின் பணிகளைச் செவ்வனே ஆற்ற மாணவ மன்றங்கள் நல்லதொரு பயிற்சியை அளிக்கின்றன. மாணவ மன்றங்களின் குறிக்கோள் நாட்டுப்பணியாளரின் திசையினின்றும் வேறுபட்டதாயினும் மாணவர்களிடையே திட்டமிடல், ஒழுங்கமைத்தல், தலைமைவகித்தல், ஒன்று படுத்தல், கட்டுப்படுத்தல், தூண்டுதல் ஆகிய முன்மைப் பிரிவுகள் உள்ளடக்கிய அம்சங்கள் உள்ளீடாகத் தோன்றி மலர்ந்து அவர்களது எதிர்காலக் கடமையை சீர்ப்படுத்துகின்றது.

மாணவ மன்றங்களின்வளர்ச்சி அம்மன்றங்களின் குறிக்கோள், உறுப்பினரின் நேர்மை, உண்மை, செய்திறன், தியாகம், முதலியவற்றில் தங்கியுள்ளது. மாணவ மன்றங்களின் குறைபாடுகள் அவை இயங்கும் பாடசாலைகளைப் பாதிப்பதால் மாணவர்கள் மனோபலத்துடன் செயற்பட வேண்டும். மாணவர்களுள் அடங்கியிருக்கும் சக்தி வலிமை வாய்ந்தது. இச்சக்திகள் ஒன்றுபட்ட மன்றங்கள் என்றால் அவற்றின் வலுவையிட்டுப் பேசவும் வேண்டுமோ! மாணவ மன்றங்களில் உருவாகும் மனோபலமும், செயற்திறனும் காலகதியில் மாணவர்களை தொழிற்சங்க உறுப்பினர்களாகவோ ஏன் நாட்டின் தலைவர்களாகவோ ஆக்குகின்றன.

இத்தகைய மாணவ மன்றங்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமையுமா என்பது ஒருகேள்விக்குறி. காரணம் சீரற்ற உயர்கல்வி வாய்ப்புக்கள், திட்டமிடப்பட்ட புறக்கணிப்பு, என்பனவாகும் இச்செயல்கள் மக்கள் மத்தியில் ஒரு பீதியை ஏற்படுத்தியுள்ளன. இதற்கூடாக உற்று நோக்கின் மாணவ மன்றங்கள் சமுதாயத்தில் நிலவும் தீய பழக்க வழக்கங்களைக் கட்டுப்படுத்தவும், ஆராய்வின்றிக் கைக்கொள்ளப்படும் சம்பிரதாயச் செயல்கள், சாதி மத பேதம், சீதனக் கொடுமை, என்பனவற்றிற்கு எதிராகப் போர்க் கொடிதூக்கும் ஒரு களமாக அமைகின்றன.

இவ்வாறாயின் மாணவ மன்றங்கள் தத்தம் குறிக்கோளை வரையறுத்து, தமக்குள்ளே எழும் விரோத குரோதங்கட்கு இடங்கொடாது, இணைந்து செயற்பட்டு, குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்கின்ற பண்புடைத்து இயங்கவேண்டும். உயர் நீதியுடையவரே உற்றார் என்று கண்டு, தன்னினத்தான் வேறினத்தான் தன்பகைவன் தன்நண்பன் எவனாயினும் அன்னவனின் அருஞ்செயற் பாராட்டும் பண்பு கண்டு மன்றத்தின் நோக்கமது, ஏற்றமது மாற்றமுறுவகையே நாடி, குயிலினம் போல் பறந்தாடி, சேவைசெய்வதே மாணவ மன்றங்களின் தலையாய கடனாகும்.

— —

## " நன்றி மறப்பது நன்றன்று "

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

என்னும் பொய்யா மொழிப்புலவரின் மெய்வாக்கை அனுசரித்து கலை விழாக்கண்டு களிப்புடன் மீளும் உங்களுக்கு கரம்கூப்பி கோலாகல வந்தனங்களைத் தெரிவிக்கும் அதே வேளையில் கடந்துவந்த மைல் கற்களையும் கலைவிழா நோக்கினையும் ஒருமுறை ஆராய்வோம்.

நாம் வாழ, நமது இன்பம் வாழ, நம் மொழி வாழ வேண்டும். நம்மொழி வாழக் கலை கலாசாரம் வாழவேண்டும். சங்கத்தில் வளர்ந்து, தமிழ்ப் புலவர்கள், அறிஞர்களினால் காக்கப்பட்ட நம் செந்தமிழ் மொழி செழிப்பிழந்து அதன் பொலிவிழந்து இன்று பாரினில் மறைக்கப்படும் அன்றி மறுக்கப்படும் ஒன்றாகி விட்ட நிலை பற்றி ஆராய்வோமாயின், நம் கலை, கலாசாரம் மறந்து அந்நிய மோகம் கொண்டு அலையும் நந்தமிழ் ஆடவர்களின், அணங்குகளின் நிலைகண்டு நாணிநிற்கும் அதேவேளை கன்னித் தமிழ் மணக்கும் இக்கலைவிழாவை ஏற்பாடு செய்து உங்கள் முன் அரங்கேற்றுவதையிட்டுப் பெருமைப்படும் நாம் இப்புனிதமான எம்முயற்சிக்கு பேராதரவு நல்கிய உங்கள் அனைவருக்கும் எமது மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

இந்த இனிய விழாவிற்கு பல்சுவையூட்டும் நிகழ்ச்சிகளைத்தந்து உதவிய மாணவ மணிகளுக்கும், இவ்விழாவை யொட்டி வெளியிடப்பட்ட 'கலைமலர்' சிறப்புடைய ஆக்கங்கள் அளித்து, ஊக்கங்கள் கொடுத்தவர்கட்கும், வர்த்தக விளம்பரங்கள் நல்கிய வணிகப் பெருமக்களுக்கும், அவ்விளம்பரங்களை எடுக்கும் முயற்சியில் மாணவர்கள் மட்டுமின்றி மாணவர்களோடு தோளொடு தோள் கொடுத்து நின்ற மதிப்புக்குரிய பெற்றோர்களுக்கும், இம்மலரை குறுகிய காலத்தில் அச்சிட்டும், மற்றும் பல எமது ஒன்றியத்தின் அச்சுவேலைகளையும் செய்து உதவிய செட்டியார் அச்சகத்தினருக்கும், மீண்டும் மீண்டும் நன்றி சொல்லக் கடமைப்பாடுடையோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவ்விழாவை கல்லூரியில் நடாத்த அனுமதி அளித்ததுடன், ஆக்கமும், அறிவுரையும் ஊக்கமும் நல்கிய உயர்திரு அதிபர் அவர்கட்கும், மற்றும் பல்வேறு முறைகளில் உதவிபுரிந்த உபபுரவலர்கள், ஆசிரியர்கள், ஆகியோருக்கும் எமது பணிவான நன்றிகளைக் குருந்த மரநிழலில் எம்பிரானிடம் நன்றி சொல்லிய மாணிக்கவாசகரின் நிலையில் இருந்து நவில்கின்றோம். மலர்ந்திருக்கும் புத்தாண்டின் ஒளி மயமான எதிர்காலத்தை எதிர்நோக்கி, மீண்டும் உளம்நிறைந்த நன்றிகளுடன் விடை பெறுகின்றோம்.

வை. யோகேஸ்வரன்
(ஒன்றியச் செயலாளர்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உயர்தர மாணவர் ஒன்றியம் (முதலாம் வருடம்)

காணும் கலைவிழா

அவர்களது

சிந்தனையும் செயலும் கலந்து

பரிணமிக்கும்

உயர் விழாவாக

அமைய

எமது

வாழ்த்துக்கள்

செட்டியார் அச்சகம்

432, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல் லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் — வாழி

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே — பல
கலைமலி கழகமும் இதுவே — தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே !

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவேம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே !

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே !

ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே !
ஒளிர்மிகு கழகமும் இதுவே !
உயர்வுறு கழகமும் இதுவே !
உயிரன கழகமும் இதுவே !

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க !

வாழ்க ! வாழ்க ! வாழ்க
தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

இம் மலர்ப் படைப்புக்கு

ஆக்கங்கள் தந்தவர்கட்கும்

ஊக்கங்கள் அளித்தவர்களுக்கும்

விளம்பரம் தந்துதவிய நிறுவனங்களுக்கும்

அச்சுவேலைகளைக் குறித்த காலத்திற் செய்துதவிய
செட்டியார் அச்சகத்தினருக்கும்

விழா சிறப்புற அமையச் செயற்பட்ட ஆசிரியர்கள்,
மாணவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும்

சுவைஞர்களுக்கும்

எமது உளம் கனிந்த நன்றிகள்

**யா. இ. க. உயர்தர மாணவர் ஒன்றியம்**
(முதலாம் வருடம்)

---


வாசித்துவிட்டீர்களா !

# விகடகவி

நகைச்சுவை இலக்கியத் திங்களிதழ்

சிரிகதை, சிறுகதை, கவிதைகள், திரைப்பட விமர்சனங்கள்,
இன்றைய ஸ்பெசல் சிரியாணி, பல்சுவைத் துணுக்குகள்
மற்றும்
மஞ்சளடிக்கும் மாரிமுத்தண்ணர்
இன்னும் பல......

"விகடகவி" வீற்றிருக்கும் இடம்: யாழ். இந்துக் கல்லூரி நூல்நிலையம்

மில்க்வைற்

நாட்டுக்கு நலம்புரிதல் நமது நாகரிகம்
நம்பியரும் நங்கையரும் நல்லபணி புரிவீர்
வீட்டுக்கொரு பசு வளர்த்து வேண்டுவன பெறுவீர்
விதம் விதமாய்க் காய்கறிகள் வீட்டோரம் வளர்ப்பீர்
காட்டிலுள்ள வெறுந்தரையில் கற்பகமாம் பனையை
கண்டநின்ற இடமெல்லாம் கலகலக்க நடுவீர்
ஏட்டில் உள்ள சுரைக்காய்கள் கறிக்குதவ மாட்டா
இதை அறிந்து செய்திட்டம் செயற்றிட்டம் செய்வீர்.

பஞ்சமில்லை பசியில்லை பிணியில்லை மூப்பும்
பாதகமும் வன்செயலும் இங்கில்லை என்போம்
எஞ்சியுள்ள அருங்கலைகள் எம்நாட்டில் வாழ
எதிலும்வல்ல இளைஞர்களே எழுந்துகை கொடுப்பீர்
பஞ்சுவிதை நாம்தருவோம் பசளைவிதை தருவோம்
பகலுறக்கம் விடுத்திவற்றைப் பயிர்செய்திடுவீர்
நெஞ்சிலுமை நாம்வாழ்த்த நாட்டுப்பணி செய்ய
நெடுங்காலம் வாழஉமை மணவாளன் காக்க.

நல்லதையே செய்யுங்கள்
හොඳ දේයක් කරන්න
DO GOOD

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கிளை: 79, மெசன்ஜர் வீதி, கொழும்பு - 12.
தொலைபேசி: 36063


செட்டியார் அச்சகம், 432, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.